Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 150 | திங்கட்கிழமை | சித்திரை 13 ஆம் நாள் 26 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## கொரோனா தொற்றால் இருவர் சாவு

கொழும்பு, ஏப்.26

கொரொனா வைரஸ் தொற்றால் நாட்டில் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார 15

# தொற்று அறிகுறிக்கு முன்னரே நுரையீரலை தாக்கும் வைரஸ்!

### திரிபடைந்த வைரஸ் அபாயம் என இலங்கையர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 26

இலங்கையில் தற்போது வேகமாகப் பரவிவரும் புதிய வீரியம் கொண்ட கொரோனா வைரஸ் தொற்றியதன் பின்னர், நோய் அறிகுறிகள் தென்படுவதற்கு முன்னரே, நிமோனியா (நுரையீரல் அழற்சி) நிலைமை ஏற்படும் என்று மானுட 15

## யாழ். சட்டத்துறை மாணவர் உட்பட 7 பேருக்குத் தொற்று

### வடக்கில் 9 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ்ப்பாணத்தில் நேற்று 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் இருவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை 15

## சீன அன்பளிப்பு தடுப்பூசியை மக்களுக்கு ஏற்ற நடவடிக்கை!

### ஜனாதிபதி கோத்தா தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 26

சீனாவிடமிருந்து அன்பளிப்பாகக் கிடைத்துள்ள 6 லட்சம் தடுப்பூசிகளும் நாட்டு மக்களுக்கு சில வாரங்களில் ஏற்றப்படும். உலக சுகாதார நிறுவனத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றதுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 15

# கையளித்த காணிகளை மீளப் பறித்தது ராணுவம்

## வலி. வடக்கில் அடாத்து!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட காங்கேசன்துறை பிரதேசத்தில் மக்கள் பாவனைக்காக கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் விடுவிக்கப்பட்ட தனியார் காணிகளை இராணுவம் அடாத்தாகக் கையகப்படுத்தியுள்ளது என குற்றம் சுமத்தப்படுகின்றது. 15

## அனைத்து நிகழ்வுகளுக்கும் இரு வாரங்களுக்குத் தடை!

கொழும்பு, ஏப்.26

எதிர்வரும் இருவார காலப் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அனைத்து அரச மற்றும் தனியார் துறை நிகழ்வுகளை நிறுத்துவது என்று அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. 15

## எழுமாற்று பரிசோதனை: நால்வருக்கு தொற்று உறுதி

வவுனியா, ஏப்.26

வவுனியா மாவட்டத்தில் நேற்று 4 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையி 15

## நிலக்கண்ணிவெடியில் சிக்கி வட்டுவாகலில் இளைஞர் சாவு

### தாயின் கண்முன்னே கொடூரம்

முல்லைத்தீவு, ஏப்.26

முல்லைத்தீவு, வட்டுவாகலில் நேற்று பிற்பகல் நடந்த வெடிப்புச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இன்னொரு இளைஞர் படுகாயமடைந்துள்ளார். 15



## காணி மீளப் பறித்தமை தளபதிக்குத் தெரியாதாம்!

யாழ்ப்பாணம், ஏப். 26

மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட காணிகளை மீண்டும் சுவீகரிக்கும் நோக்கம் எமக்கு இல்லை. ஆனால் நீங்கள் குறிப்பிடும் விடயம் தொடர்பில் ஆராய்கின்றேன். இவ்வாறு இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். நல்லாட்சி அர 15

## அதிவேகத்தால் விபத்து: சிறுமியின் உயிர் பறிப்பு

### வவுனியாவில் சோகம்

வவுனியா,ஏப்.26

வவுனியா அலகல்லு பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் 9 வயதுச் சிறுமி 15



## நாட்டை முடக்கும் இயலுமை தற்போது அரசுக்கு இல்லை!

### சமூக நடத்தைகளை ஒழுக்கப்பண்புடன் பின்பற்றுவதே வழி என்கிறார் கோத்தாபய

கொழும்பு, ஏப். 26

பொருளாதாரச் செயற்பாடுகளை முற்றாக முடக்கி விடக்கூடிய வகையில் ஊரடங்குச் சட்டத்தை பிறப்பிப்பது இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் 15

## போதைப்பொருள் கடத்தல்: நால்வர் பொலிஸ் பிடியில்!



யாழ்ப்பாணம், ஏப்.26

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்குப் போதைப் பொருள்களைக் கடத்தி விநியோகித்த குற்றச்சாட்டில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீன ஆதிக்கம் அதிகரிப்பதால் தமிழர் விடயம் பேசப்படலாம்!

ஈ.சரவணபவன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்.26**

**இலங்கையில் இப்போது சீன ஈழம் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. தமிழ் மக்கள் தனியான அலகு கேட்டபோது பொங்கியெழுந்தவர்கள் சீனாவுக்கு நாட்டை அடகு வைக்கும்போது அடக்கி வாசிக்கின்றனர். சீனாவின் ஆதிக்கத்தால் தமிழர்களின் பிரச்சினை மீண்டும் சர்வதேசத்தால் கையில் எடுக்கப்படும் வாய்ப்புக்கள் உள்ளன.**

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன். சங்கானையில் நேற்று நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது 80 ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்து தமிழ் இளைஞர்கள் தங்களை அர்ப்பணித்துச் செயற்பட்டனர். அவர்களின் அர்ப்பணிப்புகள் வீண் போகவில்லை. அவர்களின் அர்ப்பணிப்புகள் ஊடாகவே நாங்கள் இப்போது சர்வதேச கவனத்தைப் பெற்றிருக்கின்றோம். இல்லாவிட்டால் தமிழ் மக்கள் இந்தத் தீவில் இருந்து எப்போதோ தூக்கியெறிப் பட்டிருப்பார்கள். அதை நாம் மறந்துவிடுகின்றோம். ஆனால் அந்த வரலாறுகள் இளங்கலைஞர்களால் நினைவூட்டப்படுகின்றது. அது வரவேற்கத் தக்கது. எமது இளைஞர்களை சிறப்பான முறையில் நாம் வளர்க்க வேண்டும். அவர்கள்தான் எமது எதிர்காலத் தலைவர்கள்.

இப்போது கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்பன மெல்ல மெல்ல ஒடுக்கப்பட்டு வருகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டம் எந்நேரமும், எவர் மீதும் பாயலாம் என்ற நிலைமையே இருக்கின்றது. இளைஞர்கள் தங்களை நெறிப்படுத்திச் செயற்பட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

இப்போது நாட்டில் சீனாவுக்குத் தனி இடத்தைக் கொடுப்பதற்குத் தயாராகின்றனர். 216 ஹெக்ரெயர் பரப்பில் கடல் நிரவப்பட்டு நகர் ஒன்று உருவாக்கப்படுகின்றது. அதில் இலங்கைக்குச் சொந்தமானது 90 ஏக்கர் நிலம்தான். மிகுதி சீனாவுக்கே சொந்தம். அந்தப் பகுதிக்கு தனியான சட்டம் கொண்டுவருதற்கு முயன்றனர். நாடாளுமன்றம் கூடக் கேள்வி கேட்க முடியாதவாறு அந்தச் சட்டம் காணப்படுகின்றது என்று அறிய முடிகின்றது. இந்தச் சட்டம் நிறைவேறினால் இலங்கையில் சீன வழி பூட்டப் பிள்ளைகள் உருவாகலாம். இந்த நிலைமை இந்தியாவுக்கு ஏற்றதாக இல்லை. மேற்குநாடுகளுக்கும் ஏற்றதாக இல்லை. அதனால் தமிழ் மக்களின் பிரச்சினையைக் கருவியாக்கி மீண்டும் கையில் எடுக்கப்படும் சாத்தியங்கள் உண்டு. தமிழ் மக்களை அரசு அரவணைத்துச் சென்றால் நாட்டை முன்னேற்ற முடியும். இவற்றை எல்லாம் உணராது நாட்டை அடகு வைக்க முயல்கின்றனர். இவற்றால் எழும் இன்னனங்களுக்கு அரசு மட்டுமல்ல முழு நாடுமே விலை கொடுக்க நேரிடும். (எ -319)

## கவிதை நூல்கள் வெளியீட்டு வழா



யாழ்ப்பாணம்.ஏப்.26

"தமிழ் இனி மெல்ல அச்சாகும்"எனும் தொனிப்பொருளில், எஸ்.ரி.ரி.எஸ் வெளியீட்டகத்தின் ஏற்பாட்டில் இளம் படைப்பாளர்களான எஸ்.ரி.திஸ்னுகனின் "தேடல்" ஆர்.சரணிகாவின் "நாளைய நான் " எஸ்.ரி.அருள்குமரனின் "சோலர் " ஆகிய கவிதை நூல்கள் நேற்று வெளியிடப்பட்டன.

சங்கானை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன் கந்து கொண்டார். அவருடன் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் நடனேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-319)

## வல்வையில் நேற்று புலிவேட்டை




வல்வெட்டித்துறை, ஏப்.26

வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிலவ வருட மகோற்சவத்தின் 12ஆம் திருவிழாவான நேற்று புலிவேட்டைத் திருவிழா நடைபெற்றது.

புலி வேட்டைத் திருவிழாவை சிறப்பிக்கும் வண்ணம் சிலம்பாட்டம், வானவேடிக்கை, வேடன் வேடுவிச்சி உட்பட புலி வேட்டை நிகழ்வுகள் இடம்பெற்றன. சிறுவர்கள், இளைஞர்கள் எனப் பலர் புலிச் சீருடையணிந்து புலி போன்று வேடமிட்டு புலி வேட்டைத் திருவிழாவில் கலந்துகொண்டனர். இந்த திருவிழா தொன்றுதொட்டு வல்வை மண்ணில் இடம்பெறுவதால், புலிவேட்டைத் திருவிழாவை மக்கள் சிறப்பாகக் கொண்டாடியினர். (ப-26)

## பொன்னாலையில் எலியால் விபரீதம்; தற்காலிக குடிசை எரிந்து நாசம்



பொன்னாலை மேற்கில் நான்கு பேரை உள்ளடக்கிய குடும்பம் ஒன்று வசித்த தற்காலிகக் குடிசை ஒன்று எரிந்து சாம்பராகியுள்ளது. தெய்வாதீனமாக எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. எனினும் பெறுமதிமிக்க ஆவணங்களும் ஒரு தொகைப் பணமும் எரிந்து அழிந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது

சுவாமிப் படத்துக்கு ஏற்றிய விளக்குத் திரியை எலி இழுத்துச் சென்றதாலேயே குடிசை எரிந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

குடிசையின் உள்ளே இருந்த காணி உறுதி, பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் எரிந்து அழிந்துள்ளன. கடற்றொழிலாளியான இவர் புதிதாக வாங்கி வைத்திருந்த வலைகள். மின்சாதனங்கள், சமையல் பாத்திரங்கள், உடுபுடவைகள் உட்பட அனைத்துமே எரிந்து அழிந்துள்ளன.

குறித்த குடும்பத்தலைவர், பொன்னாலை ஸ்ரீகண்ணன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொருளாளராக இருந்ததால் தொழிலாளர்களுக்கு இடையே சுழற்சி முறையில் கடன் வழங்குவதற்கான இலட்சக்கணக்கான ரூபா பணமும் இவரிடம் இருந்துள்ளது. அப்பணம் மற்றும் சங்க ஆவணங்களும் தீயில் எரிந்து அழிந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் ஒருதொகை நாணயத் தாள்கள் அரைகுறையில் எரிந்த நிலையில் மீட்கப்பட்டன. சம்பவ இடத்துக்கு வந்த கிராம அலுவலர் ந.சிவரூபன் மற்றும் வட்டுக்கோட்டை பொலிஸார் ஆகியோர் சேத விபரங்களைப் பார்வையிட்டனர். சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ப)

## சங்கிலி அபகரிக்க முயற்சி; தருமபுரத்தில் இருவர் கைது

கிளிநொச்சி, ஏப்.26

வீதியில் சென்ற பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரிக்க முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கணைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தாய், மகள் உள்ளிட்ட மூவர், விசுவமடு பகுதியில் இருந்து, திருமண நிகழ்வு ஒன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர். அவர்களை இனந்தெரியாத நபர்கள் பின் தொடர்ந்துள்ளனர். புளியம்பொக்கணைப் பகுதியில் அவர்கள் சங்கிலியை அறுத்து தப்பித்துள்ளனர். இதை அவதானித்த ஒருவர் அவர்களைத் துரத்திச் சென்று பிடித்துள்ளார். ஒருவர் தப்பிச் சென்ற நிலையில் இருவர் பிடிபட்டனர். அவர்கள் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர். (ப-113)

## மன். மாந்தை மேற்கு தவிசாளர் உயிரிழப்பு

மன்னார், ஏப்.26



மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் செல்லத்தம்பு என அழைக்கப்படும் ஆசிர்வாதம் சந்தியோகு தனது 66 ஆவது வயதில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை உயிரிழந்தார். உடல் [illegible] காரணமாக யாழ். போதனா [illegible] மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த் நிலையிலே அவர் உயிரிழந்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாந்தை மேற்கு பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நிலையில் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளராக அவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். (ப213)

## கிழக்கில் மீண்டும் மூடப்பட்டன பாடசாலைகள்

திருமலை, ஏப்.26

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் மீள அறிவிக்கும் வரையில் மூடப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவின் அடிப்படையில் இவ்வாறு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. கொரோனா அச்சம் தற்போது மீண்டும் அதிகரித்துள்ள நிலையிலேயே இவ்வாறு கிழக்கில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பு கானல் நீர்தான்

## கூறுகிறார் விஜயதாஸ

**கொழும்பு, ஏப். 26**

**ஆளும் கட்சி பல கூறுகளாக உடைந்துள்ளது. இந்தச் சூழலில் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படும் என்று நான் நம்பவில்லை.**



இவ்வாறு ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ச கொழும்பு தமிழ் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலில் கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

20ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதி தனது அதிகாரங்களை அதிகரித்துக் கொண்டார். அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் புதிய அரசமைப்பையும் உருவாக்கி நிறைவேற்றியிருக்கவேண்டும். ஆனால் அவர்கள் அக்கறை காட்டவில்லை.

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்து 44 உறுப்பினர்களுடன் 19ஆவது அரசமைப்பு திருத்தத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்தது.

அதனை நான்தான் செய்தேன். 215 உறுப்பினர்களின் ஆதரவுடன் அதனை நிறைவேற்றினேன்- என்றார். (ஒ.இ)

# மஹிந்தவுடனான சந்திப்பில் தேர்தல் தொடர்பில் தீர்மானம்

## பெரமுனவின் செயலர் திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 26

அடுத்த மாத ஆரம்பத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் ஆளும் கட்சியின் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பின்போது, மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பில் உறுதியான தீர்மானம் மேற்கொள்ளப்படும். இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறிலங்கா பொதுஜன பெரமுன கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஒரு சிலர் கடந்த காலங்களில் தேவையற்ற பிரச்சினைகளைத் தோற்றுவித்தார்கள்.

ஆளும் கூட்டணியில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச கடந்த 19ஆம் திகதி கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் 10 பேர் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் தனித்துச் சந்திப்பதற்கு பிரதமரிடம் நேரம் கோரியுள்ளனர். அடுத்த வாரம் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. இதன்போது கூட்டணியின் முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பிலும் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும்- என்றார். (ஒ.இ)

# மாகாணசபைத் தேர்தலுக்கான சாத்தியம் இந்த ஆண்டு இல்லை

## ஆளும் கட்சி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 26



மாகாணசபைத் தேர்தலை இந்த ஆண்டுக்குள் நடத்துவதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவு. இவ்வாறு ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் லங்கா சமாசக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பில் உள்ளூராட்சி அமைச்சர், அமைச்சரவையில் சமர்ப்பித்த யோசனை தொடர்பில் அமைச்சரவையிலும் சரி, ஆளும் கட்சியிலும் சரி கருத்தொருமைப்பாடு இல்லை.

எனவே தேர்தல் முறைமை தொடர்பில் தீர்மானிக்கப்படாமல் தேர்தலை நடத்த முடியாது. கட்சித் தலைவர்களுடன் அதிலும் குறிப்பாக சிறிய கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தியே தேர்தல் முறைமை தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவே மாகாணசபை முறைமை கொண்டு வரப்பட்டது. எனவே அத்தகைய மாகாணசபையின் தேர்தல் முறைமை தொடர்பில் தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்களின் நிலைப்பாடுகளை நிச்சயம் உள்வாங்கி அதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும்- என்றார். (ஒ.இ)

# அரசியல் பழிவாங்கல் இன்னும் ஓயவில்லை

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

1977 ஆம் ஆண்டில் இருந்து இந்த நாட்டில் ஆட்சிக்கு வந்த அரசுகள் மூலம், அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பழிவாங்கல்களில் அரச அதிகாரிகள், இலங்கை போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகள், மற்றும் சதொச நிறுவன அதிகாரிகள் ஆகியோரே தொடர்ந்து பழிவாங்கப்படுகின்றனர். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

தற்போதைய அரசு அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராய்வதற்கென ஆணைக்குழுவை அமைத்து, அதில் தேவையற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எவருக்காவது அநீதி ஏற்பட்டிருந்தால், அது தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் நாட்டில் இருக்கும் நீதிமன்றத்துக்கே இருக்கின்றது.

அந்த அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்குப் பெற்றுக் கொண்டு, ஆணைக்குழு அமைத்து நடவடிக்கை எடுப்பது சட்டத்துக்கு முரணானதாகும். குற்றவாளிகள் தப்பித்துக் கொண்டாலும், ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்படக்கூடாது என்பதே உலகளாவிய நியதியாகும்.

அவ்வாறு இருக்கும்போது ஆணைக்குழு அமைத்து விசாரணை மேற்கொள்வது அரசியல் பழிவாங்கலுக்கு காரணமாகின்றது- என்றார். (ப-4)

# சமஷ்டி ஆட்சி ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன

## ஆளும் கட்சி எம்.பி.பிரேம ஜெயந்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 26

சிறிலங்காவில் சமஷ்டி ஆட்சி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்று ஆளும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான சுசில் பிரேமஜெயந்த ஆருடம் வெளியிட்டுள்ளார். இருப்பினும் ஒருபோதும் தனிநாடொன்று உருவாகாது என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிலர் சிறிலங்கா இரண்டாகப் பிரிகின்றது என்றும் தனிநாடு உருவாகின்றது என்றும் விமர்சனங்களை வெளியிட ஆரம்பித்துள்ளனர். ஆனால் அதில் உண்மை இல்லை. 13ஆவது திருத்தமானது நாட்டில் 9 மாகாணங்களாக பிரிக்கப்படுகின்றது. அதில் ஒன்றாகிலும் பிரிக்கப்பட்டால் நாடு சமஸ்டியாகும் என்பதை ஜே.ஆர். ஜெயவர்தன கூறியிருந்தார்.

ஆளுநர் நீக்கப்பட்டால் நாடு பிரிவதற்கான வாய்ப்பு உள்ளது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்துக்கு அமையவே ஆளுநர்கள் நியமிக்கப்படுகின்றனர். அதனால் மாகாண சபைகளுக்கு நிறைவேற்றதிகாரம் இல்லை. அதனை நாடாளுமன்றத்தின் ஊடாக குறைக்கவும் முடியும்.

மாகாணங்களுக்கு புறம்பான நீதிமன்றங்கள் இல்லை. மாவட்ட நீதிமன்றங்கள் நாட்டின் ஒட்டுமொத்த நீதிமன்றக் கட்டமைப்புக்குள்தான் இருக்கின்றன. ஆகவே மாகாண சபை முறை வரும்போது அன்று கைகளை உயர்த்தியவர்கள் இன்று நாடு பிரிக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கின்றனர்.

எதிர்க்கட்சியினர் தெரிவிப்பதுபோல கொழும்பு போர்ட் சிட்டி திட்டம் சீனக் காலனியாகாது, தனிநாடாகவும் மாறாது. தற்போது நாட்டில் நடைமுறையில் இருக்கும் சட்டங்களில் 7 சட்டங்களைத் தவிர, 57 சட்டங்கள் அந்தத் திட்டமுள்ள பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும். - என்றார். (த-இ)



# நாடாளுமன்றுக்குள் மோதல்; புதனன்று கூடும் விசேட குழு

கொழும்பு, ஏப். 26

நாடாளுமன்றுக்குள் உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் ஆராய்வதற்காக, நியமிக்கப்பட்ட விசேட குழு, எதிர்வரும் புதன்கிழமை கூடவுள்ளது.

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தலைமையில், விசேட குழு கூடும். அன்றையதினம் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், உறுப்பினர்களுக்கிடையில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது. இதனையடுத்து சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக சபாநாயகரால் இந்த விசேட குழு நியமிக்கப்பட்டிருந்தது.

குழுவின் உறுப்பினர்களாக அமைச்சர்களான சமல் ராஜபக்ச, கெஹலிய ரம்புக்வெல, இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, அனுர பிரியதர்சன யாப்பா, இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல்பேர்வழிகளையே காப்பாற்றத்துடிக்கும் நீங்களா போர்க்குற்றவாளிகளை தண்டிப்பீர்கள்?

## விக்னேஸ்வரன் நெத்தியடி கேள்வி



**கொழும்பு, ஏப். 26**

**ஊழல்களில் ஈடுபட்டுள்ளனர் என குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது விசாரணை நடத்த விடாமல் தடுக்கும் அரசு போர்க் குற்றவாளிகளைத் தண்டிக்கும் என்று எவ்வாறு நம்பலாம்? இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

அரசியல் ரீதியான பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இவ் ஆணைக்குழு உருவாக்குவதற்கு ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானியில், ஆணைக்குழுவால் அதன் குறிக்கோள்கள் சம்பந்தமாக எடுக்கப் போகும் நடவடிக்கைகள் ஏற்கனவே நீதிமன்றங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கோ எடுக்கப்படப்போகும் நடவடிக்கைகளுக்கோ பாதிப்பில்லாமல் அவற்றுக்கு அப்பால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்று கூறப்பட்டுள்ளது.

'பாதிப்பில்லாமல்' என்று கூறும்போது ஆணைக்குழுவின் புதிய நடவடிக்கைகள் தற்போது நடைமுறையில் இருந்து வரும் நீதிமன்ற நடவடிக்கைகளைப் பாதிக்கமாட்டா என்று அர்த்தப்படும்.

அப்படியானால் நீதிமன்றங்களில் எடுக்கப்பட்ட பல தீர்மானங்களைப் புறந்தள்ளும் விதத்தில் ஆணைக்குழு செயற்பட்டதன் அர்த்தம் என்ன? ஆணைக்குழு தான் எடுத்திருக்கும் நடவடிக்கைகளின் தாற்பரியத்தை அறியாது இருப்பது விந்தையேயாகும்.

இவ்வளவும் கூறிய பின், இன்னொரு கோணத்தில் இருந்தும் இதைப் பார்க்கின்றேன்.

### முரணான வரவேற்பு

தற்போது இந்த நாட்டில் நடக்கும் செயற்பாடுகள் ஜனநாயகத்துக்கும், சட்டவாட்சிக்கும், பொதுச் சேவையினதும் நீதித்துறையினதும் சுதந்திர செயற்பாடுகளுக்கும் சாவு மணி அடிப்பது போல் இருந்தாலும் மாறி மாறி வந்த சிறிலங்கா அரசுகளால் பாதிப்புற்று இதுவரையில் நீதி பெறாமல் இருக்கும் தமிழ் மக்களுக்கு இந்த ஆணைக்குழுவின் நியமனமும் அதன் செயற்பாடுகளும் அதன் அறிக்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதும் ஒரு முரணான சிந்திப்பின் அடிப்படையில் வரவேற்கத்தக்கவையாகும்.

ஜெனிவாவில் தமிழர் சார்பான தரப்பினரால் கூறிய அதே விடயங்கள் இந்த நடவடிக்கைகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. நீதியின் பயணத்தை இலங்கை அரசு எவ்வாறு தவறான வழியில் திசை திருப்புகின்றது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம். தமிழர்கள் இதுவரை கூறி வந்தவற்றுக்கு இந்த நடவடிக்கைகள் ஒரு உதாரணம் போல் அமைந்துள்ளது.

### எப்படி நம்பலாம்?

நாம் என்ன கூறினோம்? நீதியானது தனது தூய பாதையில் பயணம் செய்ய இலங்கை அரசு இடமளிக்கும் என்று நாம் நம்ப முடியாது என்றோம். இதனால்த்தான் தமிழர்கள், மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் ஆகியவை ஒரு சர்வதேச நீதிமன்றை உருவாக்குங்கள் என்று கேட்டிருக்கின்றன.

ஊழல்களில் ஈடுபட்டுள்ளனர் என குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது விசாரணை நடத்த விடாமல் தடுக்கும் அரசு போர்க் குற்றவாளிகளைத் தண்டிக்கும் என்று எவ்வாறு நம்பலாம்? இலங்கைக்கு எதிராக செயற்படுகின்றார்கள் என்று எமது புலம்பெயர் உறவுகளையும், அரச சார்பற்ற அமைப்புக்களையும் மேற்குலகையும் கண்டிக்கும் அரச தரப்பில் இருக்கும் நீங்கள், தற்போது என்ன செய்கின்றீர்கள் என்பதைக் கூர்ந்து அவதானிக்க வேண்டும்.

உங்களுடைய கையாள்களையும் அடிவருடிகளையும் காப்பாற்ற நீங்கள் எடுத்திருக்கும் கேள்விக்கிடமான இந்த நடவடிக்கைகள் அல்லவா இலங்கையை அதள பாதாளத்துக்குள் தள்ளுகின்றது?

### சிந்தித்துப் பாருங்கள்!

எவராவது ஒருவர் இந்த நாட்டை நாங்கள் மட்டுமே நேசிக்கின்றோம் என்று கூறும் தகுதி பெற்றவர் அல்ல. இந்த நாட்டின் பெரும்பான்மையினர் மனிதாபிமான முறையிலும், புத்தி சாதுர்யத் துடனும், தூரநோக்குடனும் நடந்திருந்தால் தற்போதைய இந்த இடர் நிலை இந்த நாட்டைப் பாதித்திருக்காது.

எமது இளைஞர்கள் துப்பாக்கிகள் தூக்கியிருக்க மாட்டார்கள். நாங்கள் இனியாவது எமது பாதையை மாற்றி நிதானம் நோக்கியும் ஐக்கியம் நோக்கியும் செழுமைமிக்க எதிர்காலம் நோக்கியும் பயணிப்போமாக- என்றார். (ஒ,5)

ஈஸ்டர் தாக்குதல்:

# 702 பேர் இதுவரை கைது; வழக்குத் தாக்கல் இல்லை

கொழும்பு, ஏப். 26

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இதுவரை 702 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இறுதியாகக் கைது செய்யப்பட்ட ரிஷாத் மற்றும் ரியாஜ் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார். இவர்களில் 202 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 83 பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தீவிரவாத சம்பவங்கள் தொடர்பிலும் இதுவரை சந்தேகத்தில் 697பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் இதுவரை எவருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,இ)

# ஹரின் கைதுக்கு முன்னோடியாக்கவே ரிஷாத்தை மடக்கினர்

## உலபனே சுமங்கல தேரர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 26

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறு ஊழல் எதிர்ப்பு முன்னணி அமைப்பின் தலைவர் உலபனே சுமங்கல தேரர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஹரின் பெர்னாண்டோவைக் கைது செய்வதற்கான சூழலை அமைப்பதற்காக அரசு இந்த வெட்கக்கேடான செயலைச் செய்துள்ளது.

ரிஷாத் பதியுதீன், பஸில் ராஜபக்சவின் நெருங்கிய நண்பர். 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் ரிஷாத் பதியுதீனை அவருடைய விருப்பத்துக்கு ஏற்றவாறு சுதந்திரமாகச் செயற்பட பஸில் ராஜபக்ச அனுமதித்திருந்தார்-. என்றார். (ஒ,22)

# 90 நாள் தடுப்புக்காவல்: கோருகின்றனர் பொலிஸார்

கொழும்பு, ஏப். 26

கைதுசெய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோர் 72 மணித்தியாலம் தடுப்புகாவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

அதேவேளை, அவர்களை 90 நாள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க எதிர்பார்க்கின்றோம்.

அதற்குரிய அனுமதிகள் விரைவில் பெற்றுக்கொள்ளப்படும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ஒ,இ)

# சிறுபான்மையினரை ஒடுக்கும் ராஜபக்ச அரசின் பாசிச ஆட்சி!

## மக்கள் கட்சி கண்டனம்

கொழும்பு, ஏப். 26

இலங்கையை ஆளும் ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொதுஜன முன்னணி கட்சி, சிறுபான்மை முஸ்லிம்கள் மற்றும் தமிழர்களை ஒடுக்கும் பாசிச அரசாகச் செயற்பட்டு வருகின்றது இவ்வாறு தமிழகத்தின் மனித நேய மக்கள் கட்சி தெரிவித்துள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைது தொடர்பாக, மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுடன் தொடர்புபடுத்தி, அரசு தடைசெய்துள்ள முஸ்லிம் அமைப்புகளில் பெரும்பாலானவை பயங்கரவாதத்துக்கு எதிராகத் தொடர்ந்தும் மக்களிடையே பரப்புரை செய்தவை. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட, இனவாதமாகச் செயற்படும் சிங்கள அமைப்புகள் ஏன் தடை செய்யப்படவில்லை? பேராயர் மல்கம் ரஞ்சித் குறிப்பிட்டுள்ளதைப் போன்று அரசியல் ஆதாயத்துக்காகக் கைக்கூலிகளைப் பயன்படுத்தி, நடத்தப்பட்ட தாக்குதலில் ஈடுபட்ட உண்மைக் குற்றவாளிகள் தப்பவிடப்பட்டுள்ளனர்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழர்களின் நிலங்களையும் ராஜபக்ச அரசு கைப்பற்றி வருகின்றது. முதலில் இந்திய வம்சாவளித் தமிழர்கள், அடுத்து ஈழத் தமிழர்கள், இப்போது முஸ்லிம்கள் என அடுத்தடுத்து குறிவைத்து சிங்கள இனவாத அதிகார வர்க்கம் தாக்கி வருகின்றது. இலங்கை ஆட்சியாளர்கள் அரசு சிறுபான்மை விரோத போக்கைக் கைவிட வேண்டும்' -என்றுள்ளது. (ம-4,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை

இலங்கை நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் மிக முக்கியமான விடயம் ஆராயப்பட்டிருந்தது. ஆனால் அதனை பூசி மெழுகி மறைக்கும் வகையில் அல்லது அந்த விடயத்தை சிறுமைப்படுத்துவதற்காகவே வேறு சில விடயங்கள் ஊதிப் பெருப்பிக்கப்பட்டன. ஈஸ்டர் தாக்குதல், துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவு மற்றும் வீரியம் கூடிய கொரோனா போன்ற உபரிகளால் நாடாளுமன்றில் இடம்பெற்ற முக்கிய விவாதம் ஒன்றின் கனதி வீழ்த்தப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்த பின்னர் அவருக்கு இருக்கின்ற அதிகாரிகளை விஸ்தரித்துக் கொண்டார். அவரது அதிகார வரம்புக்கு உட்பட்டு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்திருந்தார். நல்லாட்சி அரசின் காலத்தில் நடைபெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழுவை அமைத்தார். அந்த ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

இந்த விவாதத்தின்போது பல. விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

குறிப்பாக நிறைவேற்று அதிகாரம் தனது கைக்கு கிடைத்தவுடன் ஜே.ஆர்.ஜெயவர்தன எவ்வாறு தனது அரசியல் எதிரிகளை குழிதோண்டிப் புதைக்க முற்பட்டாரோ அதைவிட ஒருபடி மேலே சென்று அரசியல் எதிரிகளைத் தீர்த்துக்கட்ட கோத்தாபய புதிய ஆயுதத்தை கண்டுபிடித்துவிட்டார்.

எதரணியின் தலைவர்கள் என்று அடையாளப்படுத்தும் அநுரகுமார, இரா.சம்பந்தன்,.ஹக்கீம் போன்ற தலைவர்களின் குடியுரிமையைப் பறித்து அவர்களை அரசியல் அந்தஸ்தற்றவர்களாக்கும் முயற்சி, அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அனுரகுமார, சிறு பிள்ளைகள் உண்டியலில் சேர்த்த பணத்தை மிக் விமானக் கொள்வனவு என்றபெயரில்கொள்ளையடித்தவர்களைவிடுவிக்கவேண்டும். அந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்களின் குடியுரிமையைப் பறிக்கவேண்டும் என்று கோத்தா அரசின் அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழு அமைக்கப்பட்டதன் நோக்கத்தை தோலுரித்துக் காட்டினார்.

இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டதன் ஊடாக இலங்கையின் நீதித்துறையை கோத்தா அரசே கேள்விக்குட்படுத்தியுள்ளது என்ற விடயத்தை கனகச்சிதமாகப் பிடித்துக் கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர், தமிழ் மக்களின் சர்வதேச நீதிமன்றக் கோரிக்கையை நியாயப்படுத்தும் வகையில் கோத்தாபய அரசு செயற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டினர்.

அதையும் தாண்டி, ஊழல் குற்றவாளிகளான தங்கள் பங்காளர்களைக் காப்பற்றத் துடிக்கும் இவர்களா போர்க்குற்றவாளிகளைத் தண்டிக்கப் போகின்றார்கள்? என்ற கேள்வியை விக்னேஸ்வரன் முன்வைத்திருந்தார். இந்தக் கேள்வி, உள்ளக விசாரணையில் நம்பிக்கை வைத்து செயலாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு உறுத்தலாகவே இருக்கும்.

இவை எல்லாவற்றையும் தாண்டி, ஏதோ ஒரு வகையில் அரசியல் பழிவாங்கல்களுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முற்படும் கோத்தா அரசு இப்போது என்ன செய்துகொண்டிருக்கின்றது. அந்த அரசின் ஆளும் கட்சியினர் இப்போது என்ன செய்கின்றார்கள்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான நாடாளுமன்ற விவாதம் நடந்த அதே காலப் பகுதியில், ஆளும் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவர், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்து அரச அதிகாரிகளை மிரட்டுகின்றார். அதுவும் எப்படி மிரட்டுகின்றார்? 'தமிழ்க் கூட்டமைப்புக்கு வேலை செய்த பிரதேச செயலர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் என்று பலரையும் இடமாற்றியுள்ளோம். கூட்டமைப்பை ஆதரித்தால் உங்களையும் இடமாற்றுவோம்' என்று அருட்டுகின்றார் அவர்.

நாமும் அரசியல் பழிவாங்கலைத்தான் செய்கின்றோம், செய்யப்போகின்றோம் என்று அந்த ஆளும் கட்சியின் அரசியல்வாதியே ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்குகின்றார். இந்த அரசியல் பழிவாங்கலுக்கு கோத்தா அரசு என்ன செய்யப் போகின்றது?

இதைத்தான் பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை என்று சொல்லுவார்களோ?

# ஈ.பி.டி.பி கட்சிக்குள் அடிதடி ஒருவர் மருத்துவமனையில்

வவுனியா.ஏப்.25

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்களுக்கிடையில் நேற்று இரவு இடம்பெற்ற உட்கட்சி மோதலால் கட்சியின் வவுனியா மாவட்ட உதவிச் செயலாளர் காயமடைந்தநிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கட்சியின் உதவி மாவட்டச் செயலாளருக்கும், இளைஞரணியைச் சேர்ந்த சிலருக்கும் கூமாங்குளம் பகுதியில் நேற்று இரவு கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் உதவி மாவட்டச் செயலாளர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கைகலப்பு ஏற்பட்டதற்கான காரணம் கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்தனர். (ப-110)

# கொவிட்-19 தொற்றுப் பரவும் குழாயை அடைக்கவேண்டும்

**இல்லையேல் பெரும் சிக்கல் வரும் என்கிறார் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

**கொழும்பு, ஏப். 26**

**கொரோனா வைரஸ், கடுமையாக தாக்கும் பட்சத்தில், நாட்டின் பொருளாதாரம் முழுமையாகவே பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே கொவிட் தொற்று பரவும் பிரதான குழாய் அடைக்கப்பட வேண்டும் .**

இவ்வாறு சுகாதார அமைச்சின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் சுசி பெரோரா தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

கொவிட் தொற்று பரவும் பிரதான குழாய் அடைக்கப்பட வேண்டும். அதைவிடுத்து, இலங்கை போன்ற நாடொன்றால், சுத்திகரிப்பு பணிகளை மேற்கொள்ள முடியாது. அதனால், கொவிட் தொற்று பரவுவதை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதேவேளை, இலங்கையில் கொவிட் மூன்றாவது அலை பரவ ஆரம்பிக்கும் நிலை உள்ளது என்று இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் தெரிவிக்கின்றார். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையை, தாம் மிகவும் அபாயகரமான நிலைமையாகவே கருதுகின்றோம் என்றும், இந்த அபாய நிலைமை தொடர்பில், அரசிலுள்ள உயர்மட்டத்துக்கு அறிவித்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கு-இ)

# கொரோனாவைக் கட்டுப்படுத்த கொரியாவை நாடிய இலங்கை

*தூதுவருடன் சுகாதார அமைச்சர் பேச்சு*

கொழும்பு, ஏப். 26

இலங்கையில் கொரோனாத் தொற்றை சமாளிப்பதில் கொரிய சுகாதாரத் துறையின் ஆதரவு குறித்து சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மற்றும் இலங்கைக்கான கொரிய குடியரசின் தூதுவர் வூன்ஜின் ஜியோங் ஆகியோருக்கு இடையே கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது, கொரோனாத் தொற்று நோயைக் கையாள்வதில் தென் கொரிய அரசு பயன்படுத்திய வழிமுறைகள் மற்றும் இலங்கையிலும் கொரோனா பரவுவதைக் குறைப்பதில் தென்கொரியாவின் அணுகுமுறையை எவ்வாறு கையாளலாம் என்பது குறித்து தூதர் சுகாதார அமைச்சருக்கு விளக்கி கூறினார்.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பு குறித்து கொரிய அரசு இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு பாராட்டுகளைத் தெரிவித்த அமைச்சர், இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் இலங்கை அரசு சார்பாக நன்றியையும் தூதுவருக்குத் தெரிவித்தார். (ஒ.22)

# இரு ஊசிகளும் செலுத்தியிருந்தால் தனிமைப்படுத்தல் இன்றி பி.சி.ஆர்.

கொழும்பு, ஏப். 26

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புவோர் கொரோனாத் தடுப்பூசிகள் இரண்டையும் செலுத்திக்கொண்டவர்களாக இருந்தால் அவர்களை கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தாமல் பி.சி.ஆர். பரிசோதனை மட்டுமே மேற்கொள்ளப்படும் என்று இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் காலம் 7 நாள்களிலிருந்து மீண்டும் 14 நாள்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தவிர, இலங்கை உட்பட உலகம் முழுவதும் திரிபடைந்த கொவிட் - 19 வைரஸ் பரவுகின்றது. இந்தநிலைமையால், நாட்டில் அச்சநிலை உருவெடுக்கின்றது. இந்தநிலையில், வெளிநாடுகளிலிருந்து வருவோர் தொடர்பில் மேற்படி அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (கு-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார நடைமுறைகள் இல்லையேல் இராணுவத்தினர் களமிறக்கப்படுவர்

## வவு. மாவட்டச் செயலர் எச்சரிக்கை

**வவுனியா,ஏப்.26**

**சரியான சுகாதார நடைமுறைகள் பேணப்படாவிடின் சந்தைச் செயற்பாடுகளை இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் நடத்தவேண்டி வரும் என்று மாவட்டச் செயலர் சமன் பந்துலசேன எச்சரித்துள்ளார்.**

கொவிட்-19 தாக்கம் மற்றும் அது தொடர்பில் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள், தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சந்தை வியாபாரிகள் மிகவும் கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டும். வெளி மாவட்டங்களில் இருந்தும் இங்கு வியாபாரிகள் வருகின்றனர். எனவே அந்த இடத்தில் ஒருவருக்கு தொற்று ஏற்பட்டால் பெரும் விளைவுகள் ஏற்படும் என்பதை நீங்கள் அறிந்திருக்கவேண்டும். அப்படி நடக்கும் பட்சத்தில் தினச்சந்தை செயற்பாடுகளை விசேட பொருளாதார மத்திய நிலையத்துக்கு மாற்றவேண்டி ஏற்படும். அங்கும் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாதவிடத்து கமநல சேவைகள் திணைக்களங்களூடாக இராணுவத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டு விவசாயிகளின் பொருள்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம். எனவே உங்களது ஏனைய உறுப்பினர்களுக்கு கொவிட் தொடர்பான உண்மை நிலையை எடுத்துக்கூறி உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும். கடந்த காலங்களில் ஏற்ப்பட்ட இடர்பாடுகளுக்கு இடமளிக்கக்கூடாது- என்றார். (ப-110)

## வவுனியாவில் சுகாதார நடைமுறைகளை கடுமையாக்கத் தீர்மானம்

வவுனியா, ஏப். 26

வவுனியாவில் கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 தாக்கம் மற்றும் அது தொடர்பில் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வவுனியா மாவட்டச் செயலர் சமன்பந்துலசேன தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், கொவிட் 19 தாக்கம் தொடர்பில் வவுனியாவின் தற்போதைய நிலைமை மற்றும் கொவிட் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் புதிதாக வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்தல் தொடர்பான விட யங்கள் கலந்துரையாடப்பட்டன. உரிய திணைக்களங்கள் அந்தந்த செயற்பாடுகளை இறுக்கமாகக் கண்காணிக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துர்ரியாடலில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் மகேந்திரன், கொவிட் தடுப்பு செயலணியின் இணைப்பாளர் மேயர் ஜெனரல் மகேஸ்பண்டார, பிரதி பொலிஸ்மா அதிபர் லால் செனவிரத்தின, சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொலிஸார், வர்த்தக சங்கத்தினர், போக்குவரத்து தரப்பினர் மற்றும் திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-110)

## பூந்தோட்டம் பகுதியில் குடைசாய்ந்தது பாரவூர்தி

### *3 மணிநேர போக்குவரத்து ஸ்தம்பிதம்*

வவுனியா,ஏப்.26

வவுனியா பூந்தோட்டம் பிரதான வீதியில் பாரவூர்தியொன்று வீதியை வீட்டு விலகி குடைசாய்ந்தது. இதனால் அப் பகுதியூடான போக்குவரத்து 3 மணிநேரமாக ஸ்தம்பிதம் அடைந்தது. இந்த விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது;

குறித்த வீதியில் வயல் வெளியை அண்மித்த பகுதியில் பாலம் அமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகிறன. இதனால் வீதியின் ஒரு பகுதியூடாக மாத்திரமே போக்குவரத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் பொருள்களை ஏற்றி வந்த பாரவூர்தியொன்று பூந்தோட்டம் முதன்மை வீதியூடாக பூந்தோட்டம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த சமயத்தில் பாரவூர்தியின் ஒரு பகுதி வீதியை விட்டு கீழிறங்கிய நிலையில் பாரவூர்தி குடைசாய்ந்தது.

இதன் காரணமாக வவுனியா பூந்தோட்டம் வீதியூடான போக்குவரத்து சுமார் 3 மணிநேரமாக ஸ்தம்பிதம் அடைந்தது. (ஜ-18)



## வியாபார நோக்கம் இல்லாத மணல் அகழ்வுக்கு அனுமதி

### நானாட்டான் பிரதேச செயலர் தெரிவிப்பு

மன்னார்,ஏப்.26

வியாபார நோக்கம் இல்லாத பொது மக்களின் அவசர தேவையை கருத்தில் கொண்டு நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மணல் அகழ்வு செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்று நானாட்டான் பிரதேச செயலர் மா. ஸ்ரீஸ்கந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மணல் தேவைப்படும் விண்ணப்பதாரிகள் நானாட்டான் பிரதேச சபையில் அதற்குரிய வழி அனுமதிப் பத்திரத்திரத்துக்கான கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை நானாட்டான் பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சட்ட நிறைவேற்று குழுவினரால் அனுமதிக்கப்பட்ட ஆத்திமோட்டை மற்றும் இசைமாலைத் தாழ்வு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மணல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த நடவடிக்கையை ஆத்திமோட்டை கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஜீவநகர் பாதுகாப்பு படையினர் கண்காணித்து வருவார்கள். எனவே அனுமதி பெற்றவர்கள் சூழலுக்கு பாதுகாப்பான முறையில் மணல் அகழ்வுகளை மேற்கொள்ளமுடியும்.

இந்த நடவடிக்கையை நானாட்டான் பிரதேச செயலகமும் பிரதேச சபையும் இணைந்து மேற்கொள்ளவுள்ளன. குறித்த மணல் அகழ்வு செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் மாத்திரமே இடம்பெறவுள்ளது- என்றார். (ஐ-213)

## பஞ்சதளக் கோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஏப்.26

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ விசுவேசப்பிள்ளையார் ஆலய பஞ்சதளக் கோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சித்திரா பௌர்ணமி பூசை

கிளிநொச்சி, ஏப். 26

பூநகரி பலகைக்கந்து ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த சித்திரா பௌர்ணமி பூசையும், சித்திரபுர புத்திரனார் கதையும் இன்று இடம்பெறவுள்ளன. குறித்த நிகழ்வுகள் வலையொளியிலும் ஒளிபரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கசிப்பு உற்பத்தி: இருவர் கைது

கிளிநொச்சி,ஏப்.26

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மயில்வாகனம் காட்டுப் பகுதியில் வைத்து இருவர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 28 போத்தல் கசிப்பு, 85 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்ப்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்களை விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கின்சிலிகெரத் தெரிவித்தார். (ஜ-113)

## புவி தினத்தில் மர நடுகை

கொடிகாமம்,ஏப்.26

“எங்கள் புவியை மீட்போம்” எனும் தொனிப்பொருளுக்கு அமைவாக சர்வதேச புவி தினத்தில் மரநடுகை நிகழ்ச்சித் திட்டம் ஒன்று கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்டது.

கல்லூரி வளாகத்தில் புங்கை மற்றும் பலா போன்ற மரக்கன்றுகள் கடந்த வியாழக்கிழமை நடுகை செய்யப்பட்டன.

நிகழ்வில் கல்லூரி அதிபர் திருமதி இ. மீனலோஜினி, பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். (ஜ-159)

## சாவகச்சேரியில் 136 பேருக்கு பி.சி.ஆர்.


### *எவருக்கும் தொற்றில்லை*

சாவகச்சேரி,ஏப்.26

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் கடந்த இரு நாள்கள் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் பங்குபற்றிய 136 பேருக்கும் தொற்று ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நகரப் பகுதியில் புதுவருட வியாபாரத்தில் ஈடுபட்ட புடைவை வியாபாரிகள் மற்றும் தேநீர் கடைகளை நடாத்தியவர்கள் மற்றும் அங்கு பணியாற்றியவர்கள் 63 பேருக்கும், கைதடியில் உள்ள வடமாகாண செயலகத்தில் கடமையாற்றும் 73 பேருக்கும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகிமைகள் பலகொண்ட சித்திராப்பூரணை விரதம்!

சிவரம்யா

சித்திரா பௌர்ணமி விரதமானது, பொர்ணமி விரதம் என்பது சித்திர குப்தவிரதம், சித்திரைச் சித்திரை என மூன்று நாள்களும் ஒருங்கே அமைந்துள்ள சிறப்பு விரத நாளாகும். இவ்விரத நாளை எல்லோரும் பக்தியோடும் சிறப்பாகவும் கொண்டாடுவார்கள். சித்திரை நட்சத்திரம் பௌர்ணமி தினத்தில் வருவதால் இம்மாதம் சித்திரை மாதம் எனப் பெயர் பெறலாயிற்று. சித்திரை நட்சத்திரத் தோடு சந்திரன் நிற்கும் காலம் என்பதால் சித்திரை மாதமென்று வழங்கப்படுகிறது. அச்சமயம் பூமி மேடராசியில் நிற்கின்றது. சந்திரன் சித்திரையோடு கூடிச் சித்திரைக் குரிய துலாராசியில் நிற்கின்றது. மேடத்திலிருந்து துலாம் ஏழாமிடமாதலால் பூமிக்கு ஏழாம் பாகையில் நின்ற சந்திரன் முழுவலிமை பெற்று முழுக் கிரணத்தையும் சித்திரையின் கிரணத்தோடு சேர்த்துப் பூமிக்கு அளிக்கிறான். இதனால் மிகவும் விசேடமான தினமாக சித்திரா பௌர்ணமி கணிக்கப்படுகிறது. சித்திரை மாதம் தேவர்களுக்குப் பகல் 15 நாழிகை முதல் 20 நாழிகை வரையுள்ள ஐந்து நாழிகைப் பொழுதென்றும் அது அவர்களுக்கு நண்பகல் என்றும் மதிய வேளையும் பிதுர்காலமும் ஒன்றாக அமையும் பூரணை நாள் இது என்றும் சொல்லப்படுகிறது.

புராணக் கதைகளின்படி, சித்திரகுப்தன் எமதர்மனின் பிரதம கணக்குப் பிள்ளை எனவும் தவம் புரிந்து கொண்டிருக்கும் பிரம்மாவின் உடலிலிருந்து சித்ரா பௌர்ணமி தினத்தில் தோன்றினார் என்பதாலேயே அவருக்கு அப் பெயர் வழங்கலாயிற்று என்றும் சொல்லப்படுகிறது. எமதர்மனின் சபையில் இருந்துகொண்டு சகல ஜீவராசிகளின் பாவ புண்ணியங்களை விவரமாக எடுத்துக் கூறும்படி பிரம்மா அவரை அங்கு நியமித்தார். ஒருவர் அவரது மரணகாலத்தை நெருங்கியதும் அவரவர் தலை எழுத்தைப் படித்து சித்திரகுப்தன் கொடுக்கும் அறிக்கையின்படியே அவருக்கு எமதர்மன் தண்டனை அளிப்பார். ஒருவரின் பிறப்பின்போது பிரம்மா அவரவர் தலையில் எழுதுவார். அதையே 'தலையெழுத்து' என்று கூறுவது வழக்கம்.எனவே எமதர்மன் கொடுக்கும் தண்டனை என்பது அவரவர் தலை எழுத்தை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது.


அதுமட்டுமல்லாமல் மூவுலக உயிர்களின் பாவ, புண்ணியக் கணக்குகளை எழுதி வைக்க ஒருவர் தேவை என எண்ணிய சிவபெருமான் பொற்பலகையில் ஓர் அழகிய உருவத்தை வரைந்தார். அவ்வுருவம் உயிர்பெற்றெழுந்தது. சித்திரத்திலிருந்து வந்ததாலேயே அவர் சித்திர புத்திரர் எனப் பெயர் பெற்றார் என ஓர் கதையும் உண்டு. இத் தினத்தில் இந்திரன் விமானத்திலிருந்து இறங்கிவந்து பூசித்தான் என்பது விசேடமாக அமைகிறது. இந்நாளில் மறைந்த தாயை நினைந்து விரதம் அனுட்டித்துப் பிரார்த்தனை செய்வதால் அன்னாரின் ஆத்மா சாந்தி பெறுகின்றது என்ற நம்பிக்கையும் எம்மத்தியில் உண்டு.

இத் தினத்தில் தூய்மையாயிருந்து இறைவனை வணங்கி விரதம் இருப்பர். ஆலய வழிபாடும் புரிவர். மேலும் சித்திர குப்தனைப் போன்று மாக்கோலம் இட்டு அதனருகே ஏடும் எழுத்தாணியும் வைத்து அவற்றிற்கு விளக்கேற்றிப் பூசை செய்ய வேண்டும். பிரசாதமாகப் பொங்கல் படைப்பதும் உண்டு. பசும் பால், மோர் என்பன சேர்க்காமலும் உப்பு இல்லாமலும் பகலில் மட்டும் உணவு உட்கொண்டு இரவில் 'சித்திர புத்திரநாயனார் கதை' என்னும் சரிதத்தைப் படிக்கும் வழக்கம் இந்தியாவில் உண்டு.ஒருவர் தான் நரகத்துக்குப் போவதிலிருந்து தன்னைக் காக்கவும் பாவங்களிலிருந்து விடுபடவும் இந்த விரதத்தை அனுட்டிப்பர். இந்நாளை அகம் மற்றும் புறத் தூய்மையோடு அனுட்டித்தால்மட்டுமே பயன் உண்டு. புனித தீர்த்தமாடிப் பிதிர் கடமைகள் புரியலாம். இந்தியாவில் காஞ்சிபுரத்தில் சித்திரபுத்திரனுக்கு என்று தனியாக ஒரு கோவில் உண்டு.. இந்நாளில் அங்கே பூசையும் உற்சவமும் நடைபெறுகின்றன. அன்று தமிழ்நாட்டில் உள்ள எட்டிக்குடி முருகன் ஆலயத்தில் சிறப்பான வழிபாடுகள் உண்டு. நோயும் துன்பமும் வாட்டும் இன்றைய நாள்களில் ஆலயம் சென்று இறைவனை வணங்கி நல்லாசிகள் பெறுவோமாக.

## நீத்தார் நயப்புரை

# அமரர் குமரேசு பொன்னுத்துரை

## சமூக மேம்பாட்டுக்காக உழைத்த கல்வியாளன்



அமரர் குமரேசு அமரத்துவம் அடைந்து ஒரு மாதம் கடந்துள்ள நிலையில், அவரின் வாழ்வையும் மகத்தான சமூகப் பணிகளையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது. அமரர் பொன்னுத்துரை வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்திருக்கும் சுழிபுரம் கிழக்கு கிராமத்தில் குமரேசு சின்னத்தங்கம் தம்பதியினருக்கு 1936ஆம் ஆண்டில் கடைசிப் பிள்ளையாகப் பிறந்தார்.

"தந்தையை இழந்து தமையனாரின் வழிகாட்டலில் வாழ்ந்தவர்" அமரர் அண்ணரின் வழிகாட்டலில் ஆரம்பக் கல்வியை பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் தொடங்கி சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தும் வரை அங்கேயே கற்றுக் கொண்டார். கல்வியில் ஊக்கமும் ஆர்வமும் கொண்ட சிறுவனாக விளங்கினார்.

"மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்ற முதுமொழிக்கிணங்க ஒழுக்கமுள்ள மூத்தவர்களை மதித்து அவர்கள் வாழ்க்கையை பின்பற்றி வாழ்ந்தவர். அமரர் கல்வி கற்கும் சிறு பராயத்திலிருந்து அவர்களுடைய குலத்தொழிலான தச்சுத் தொழிலையும் அண்ணர் நமசிவாயத்தின் தொழிற்கூடத்தில் முறையாகக் கற்றுக் கொண்டார்.

சிரேஷ்ட தராதரப் பரீட்சையில் சித்தியடைந்த இவர், ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய வாண்மை பயிற்சிலும் சிறந்த தேர்ச்சி அடைந்தார். இவருடைய உயர் பண்புகளால் கவரப்பட்ட நாகராசா ஆசிரியர் இவரைத் தான் கல்வி கற்பித்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தார். அங்கு சிறந்த ஆசிரியராக செயற்பட்டு ஆசிரியர்களிடையேயும் மாணவர்களிடையேயும் நன்மதிப்பையும் பெற்றுக் கொண்டார். 1969ஆம் ஆண்டு பலரின் வேண்டுகோளுக்கிணங்க கிராம சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். இக்காலத்தில் தன் வட்டாரத்தில் பல தெருக்களை தார் வீதிகளாக மாற்றினார்.

அத்துடன் சுழிபுரம் பறாளாய் ஈசுவர விநாயகர் ஆலய தேர்த் திருப்பணி சபையின் பொருளாளராக செயற்பட்டு சிறந்த சித்திரத் தேரை உருவாக்கிய பெருமைக்கும் உரியவர்.

நற்பண்புகள் வாய்க்கப்பெற்ற பொன்னுத்துரை 1971ஆம் ஆண்டு திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த தர்மலிங்கம் சரஸ்வதி தம்பதியினரின் மூத்த புதல்வியான பத்மலோஜினி என்பவரை திருமணம் செய்துகொண்டார்.

1985இல் மேற்படி கல்வி பணியிலிருந்து ஓய்வு பெற்றபின் முழுமையாகத் தன்னை சமூகப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டார். யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்பித்த பாடநெறியைத் தனது வீட்டில் வைத்தே கற்பித்தமை அவருடைய அறிவை சமூக பயன்பாட்டுக்காக அவர் செலவு செய்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் உலகளாவிய ரீதியில் மனிதப் பண்புள்ள மருத்துவர்களாகவும் பொறியியலாளர்களாகவும் செயற்பட்டு வருகின்றனர்.

போர்மேகம் சூழ்ந்த காலத்தில் இளைஞர்கள் வேலையின்றி தவித்த வேளையில் ஆனைவிழுந்தான் தொழில்நுட்பக் கல்லூரியின் விரிவுரையாளராக இருந்து இளைஞர்கள் தொழில் வளம் பெற்று பொருளாதார வளம் பெற உதவினார்.

பொன்னுத்துரை என்ற சான்றோரின் தோற்றம் அலாதியானது. வெண்ணீறு அணிந்த நெற்றி, தூயவெள்ளை வேட்டி, தூய மேலங்கி, மற்றும் புன்முறுவல் பூத்த முகத்துடன் காட்சி கொடுப்பவர்தான் அவர்.

"பணிவுடையான் இன்சொலனாதல் ஒருவற்கு அணியல்ல மற்றுப்பிற" என்ற வள்ளுவத்துக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். அடக்கமான பண்பும் இனிமையான பேச்சையும் இயல்பாகக் கொண்டமையால் குடும்பத்தினராலும் சமூகத்தினராலும் நன்கு மதிக்கப்பட்டு அவர்களுடன் கலந்துவிட்ட மனிதராக விளங்குகின்றார்.

சமூகத்தில் நிறுவனங்களில் ஆரம்ப கர்த்தாவாகவும் தலைவராகவும் செயலாளராகவும் நிர்வாகியாகவும் செயற்பட்டவர். வழக்கம்பரை முத்துமாரி யம்மன் அறக்கட்டளை நிதியத்தின் கௌரவ போசகராக இருந்து செயற்பட்டவர். மனித ஒழுக்கத்தை அறநெறியைத் தன் வாழ்வாகக் கொண்ட அமரரின் வாழ்வு மற்றவரைச் சாந்தப்படுத்தும் தன்மையது.

*நிர்வாகத்தினர்*
*தொல்புரம் வழக்கம்பரை*
*முத்துமாரியம்மன் அறக்கொடை நிதியம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரணி நாகபூஷணி அ...
## சீரணி, சண...



# ஆலய இரதோற்சவ...

## மஹோற்சவ குருக்களின் ஆசியுரை சீரணித்தாயின் சிங்காரப்பவனியிலே



மூவுலகும் தொழுதேத்தும் முப்பெரும் தேவியாவள் சித்திரத் தேரினிலே சித்திராப் பௌர்ணமியின் சிங்காரமாய் பவனிவர காணக்கண் ஆயிரம் வேண்டும். அருவமும் உருவமாகி அநாதீயாய் பலவாய் ஒன்றாய் கருணை பூத்த முகத்தினாய் சீரணியிப் பதியில் மேவி சித்திரை மஹோற்சவத்தின் பதினேழாம் திருநாளில் அன்புடன் பூஜைகள் அபிஷேகங்கள் அழகாய் அலங்காரம் செய்து முருகனும் முன்னவனும் முதலில் ஆடிவர பூவுலக மாந்தரெல்லாம் அன்புடன் சேவித்தெழுவாதுலகும் சூரியனும் அழகாகக் பூச்சொரிய தேரோடும் நன் நாள் சிறப்பாக அமைந்துவிட நல்லாசிகள் பல பகிர்கின்றேன் வாழ்க.

**சிவஸ்ரீ கு.சோமஸ்கந்த குருக்கள்**
**தேவஸ்தான குரு, மஹோற்சவ குருக்கள் சீரணி.**

## சிறப்பிதழ் வாழ்துக்கள்



தேர் ஓடும் இன் நன் நாளில் ஞானத் தெய்வம் கௌரிபாலா சுவாமிகளின் ஆசியுடன் ரதோற்சவ சிறப்பிதழ் மலர் வாழ்துத்கின்றோம். முக்காலமும் உணர்ந்த மெஞ்ஞானியால் எதிர்கால சிந்தனையுடன் வரையறை செய்யப்பட்ட உறுதி உரைகளை நாம் உதாசீனம் செய்ததால் கடந்த 12 வருடங்கள் ஆலயத்தின் செயற்பாடுகள் சிதை வடைந்தன கண்ணுற்றோம்.யாவரும் நலம்பெற வேண்டும் என்கின்ற அடிகளாரின் ஞானசக்தி இன்று உயிர்ரோட்டமாக எழுந்து ஏங்கும் பிரகாசிக்கின்றதை பார்த்து ஆனந்த மழையில் நனைந்து மகிழ்வுறும் யாவரும் தெய்வ திருமகள் எமக்கு தந்த அரிய பொக்கிசத்தை என்றும் பாதுகாப்போம் என இன் நன்னாளில் உறுதி பூணுவோம் ஆக.


**நல்லதையே சிந்திப்போம், நல்லனவே செய்வோம்**
**ஆலய தருமகர்த்தா சபை**
**உறுப்பினர்கள்.**

## தங்கரத தேரேறி....

சித்தர்கள் கூடி வாழும் சீரணியம் பதியினிலே
பக்தர்கள் புடைசூழ பவனி வரும் நாயகியே
முப்பொழுதும் நமைக்காக்க
முத்துரத தேரேறி சொர்ப்பனமாய் வலம் வருவாள்
சுந்தரி எம் நாக பூசணியே....



**இ.சிறிதரன் (தலைவர்)**
**சீரணி இந்து இளைஞர் மன்றம்**





Yaso Textile
Neliyady.

Iyynkaran Motors
Authorized Dealers for Hero and Honda Spare Parts.
Authorized Distributors of CEAT TYERS in Jaffna.
Market View,
Jaffna Road, Manipay.
iynkaranmotors@gmail.com
Tel : 021 225 5150

பத்மராஜன் அன் சன்
நகைத் தொழிலகம்
Pathmaraja & Son Jewellers
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.
பிரதான வீதி, சங்கானை.
தொ.பே. 077 6002584

With Best Compiliment From:
சக்தி எலக்ரிக்கல்ஸ்
மின்சார. இலத்திரனியல் பொருட்களின் விற்பனை
முதல்வன்
சந்தைச் சதுக்கம்,
சங்கானை.
தொ.பே 077 327 6397

Thavam Photo Color lab
M.Mahenthiralingam
Proprietor
362, Kasthuriyar Road, Jaffna.
+94 777570123
thavamphoto@gmail.com

THURKA
Furniture & Timber Sales Centre
Dealers in Timbers of All kind of Furnitnre
Chavakacheri Road, Allayampathy
Seerani Junction
Sandilipay.
0777 114852

ALDI ELECTRONICS
அல்டி எலக்ரோனிக்ஸ்
Tel/ Fax : 021 222 2676
E- Mail:aldielec@yahoo.com
68, Stanley Road, Jaffna.

PAKIYARATNAM
Hard ware stores
Distributors for :
Elephant brand soft drinks
No – 163, 165 Main street,
Chankanai.
T.P – 021 225 1244
E-Mail:-
pakiyaratnam.ccs@gmail.com
Hotline 077 5577335

KIRUBA MOTORS
கிருபா மோட்டோஸ்
பிரான் பற்று வீதி,
சங்கானை.

நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்
New Shanmugaanatha Textiles
58, 23, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :
021 222 3356

கந்தசாமி அன் சன்ஸ்
KANTHASAMI & SONS
பலசரக்குப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்
பிரதான வீதி, சங்கானை.
Main Street, Chankanai.

பாபா வெதுப்பகம்




பிரதான வீதி, சங்கானை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ம்பாள் தேவஸ்தானம்
# ண்டிலிப்பாய்
# வ சிறப்பிதழ் - 2021








## பிரதேச செயலாளரின் ஆசிச் செய்தி

ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணத்தில் வலிதென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் வரலாற்றுப் பெருமை மிக்க ஆலயமாக பெரிதும் போற்றப்படுகின்ற சீரணி நாகபூசணி அம்மன் ஆயலமானது 2021ஆம் ஆண்டிற்கான (பிலவ வருட) மகோற்சவம் கடந்த 10.04.2021ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அன்னை வழிபாட்டிற்குரிய விசேட நாளான சித்திரா பௌர்ணமி தினமான இன்று தேர் ஏறி காட்சி கொடுத்து மக்களுக்கு அருளாசிகள் வழங்குகின்ற சிறப்பு நிகழ்வுக்காக வெளிவருகின்ற இதழிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

"சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" எனும் சிறப்பிற்குரிய எங்கள் நாக பூசணி சக்தியானவள் தேர் ஏறிவரும் இன்றைய நந்நாளில் எமது பிரதேச மக்களுக்கு மட்டுமல்லாது உலகெங்கிலும் பரந்து வாழ்கின்ற உயிர்கள் அனைவருக்கும் நல்லருளை வழங்கவேண்டும் என வேண்டி நிற்கின் றேன்.

எமது பிரதேச செயலகத்தில் நடைபெறும் எக்காரியமும் அன்னையின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிப்பது வழக்கம். இதனால் தங்குதடையின்றி வேலைகள் பூர்த்தியாக்கப்படுகின்றன. நயினாதீவுக்குப் போகமுடியாத பக்தர்கள் கூட இங்கு தங்கள் நேர்த்திக்கடனை பூர்த்தி செய்து பலன் பெறுகின்றமையினையும் காண முடிகின்றது.

மக்கள் அசாதாரண சூழ்நிலையில் இடர்பட்டுக்கொண்டிருக்கும் இந்நாளில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மகோற்சவ திருவிழாக்களை முன்னெடுத்து வருகின்ற அறங்காவலர் சபையினர்களுக்கும் மற்றும் தொண்டர்கள். பக்தகோடிகள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து எல்லாம் வல்ல நாகபூசணித்தாயின் அருள் அனைவருக்கும் கிடைக்கப்பெற அன்னையை வேண்டி நிற்கின்றேன்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**யசோதா உதயகுமார்,**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம், வலி தென் மேற்கு, சண்டிலிப்பாய்.**

## வாழ்த்துச் செய்தி



சண்டிலிப்பாய் மண்ணில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய இரதோற்சவ சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். பாரம்பரிய வரலாற்றினையும். பூர்வீகப் பெருமைகளையும் கொண்ட அம்பாள் ஆலயம் இயற்கைச் சூழலிலே அமர்ந்திருந்து மக்களுக்கு அருளாசி வழங்கி வருகின்றார். அம்பாளின் இரதோற்சவம் சிறப்புற எல்லாம் வல்ல நாகபூசணி அம்மனை வேண்டுகின்றேன்.

**அ. ஜெபநேசன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**

## வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வட புலத்தின் யாழ்ப்பாண மண்ணில் சண்டிலிப் பாய் கிராமத்தின் அடையாளமாக நிமிர்ந்து நிற்கும் சீரணி நாகபூசணி அம்மன் இரதோற் சவ திருவிழா நன்னாளில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகிறேன். வர லாற்றுக்கு முற்பட்ட தொன்மையும் அடியார் களுக்கு அள்ளி வழங்கும் தாய்மையுள்ளம் படைத்த நாகபூசணி அம்பாளின் அருளாசி உலகெங்கும் வாழும் இந்து மக்களுக்கு உரித்தாகட்டும். சித்திரை பௌர்ணமி நாளில் தேர்த்திருவிழா காணும் நாகபூசணி அம்மன் தீயவற்றை அழிக்கும் வகையில் கொடிய கொவிட் தொற்றிலிருந்தும் உலக மக்களை காப்பாற்றும் வண்ணம் வேண்டிநிற்கின்றோம்.

**கு.எழிற்செல்வன்**
**கிராம அலுவலர்,**
**J/143 சண்டிலிப்பாய் மேற்கு.**


K Food Land
Seerani Junction,
Sandilipay
TP : 021 225 5140,
077 830 35408

Jaffna Casa
Hotel & Restaurant
AC, Non Ac Rooms

ஓம் வீராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
ஆசைப்பிள்ளை & சன் நகை மாடம்
AASAIPILLAI & SON NAKAI MADDAM
தங்கத்தை போன்றே தரம் மற்றும் நம்பிக்கையில் 100%
PROPRIETOR – A. KUNASEKARAM
T.P 021 225 2399
K.T Plazza,
Main Road, Chankanai
Rasapillai & Son Nagai Maddam

AMBAL
RICE MILL
அம்பாள்
அரிசி ஆலை
காரைநகர் வீதி,
சண்டிலிப்பாய்
Karainagar Road,
Sandilipay
T.P 072 7850550

மணி அன் ஈசன் ஜ்வெல்லறி
Mani & Easan
Jewellery
22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
T.P : 021 7912677,
076 256 5272
இல. 02, நவீன சந்தை,
பிரதான வீதி, சங்கானை.

Restaurant
& Café
Delicious Authentic
Foods In Jaffna City
Dine in & Takeaway
62/61, Stanley Road,
Jaffna.
021 222 4040,
077 758 5909.

லக்ஷ்மி
புடைவையகம்
LUXMI
TEXTILES
No. 10,
Aalady Junction,
Manipay.
077 2391800

City
Motors Spot
No. 374, Kasthuriyar Road,
Jaffna.
சிற்றி மோட்டோர்ஸ் ஸ்பொட்
செகன்ட் கார்(ர்)ன்ட்
பைக்சேல்ஸ்
Contact: 077 213 2456,
074 102 1459

தரன் கல்லூரி
மருதடிச்சந்தி,
மானிப்பாய்.
தரம் 06 முதல் O/L
A/L கலை மற்றும்
வர்த்தகப் பிரிவுகள்
யாழ் முன்னணி
ஆசிரியர்களால்
நிகழ்த்தப்படுகிறது.

சீரணி
அம்பாள்
மோட்டார் சைக்கிள்
திருத்தகம்
சீரணி, சண்டிலிப்பாய்
Tel : 077 617 6572

மொடேன்
மற்ஸ் அக்கடமி
MADERN MATHS
ACADAMY
தரம் - 03 – O/L , A/L வரை
தமிழ் மொழி மூலம் + English
Medium சகல பாடங்களுக்குமான
வகுப்புக்கள் பிரபல பாடசாலையில்
கற்பிக்கும் அனுபவமும் திறமையும்
மிக்க ஆசிரியர் குழுவால்
கற்பிக்கப்படுகின்றன.
நிர்வாகி B.முரய
(கணித ஆசிரியர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதிகளின் ஆதங்கங்களை திருப்திப்படுத்தவே ரிஷாத் கைது

முல்லைத்தீவு, ஏப்.26

சில இனவாதிகளின் ஆதங்கங்களை திருப்திப்படுத்தவே நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீனை அரசு கைதுசெய்துள்ளது என மாந்தை கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் ம.தயானந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

கட்சி ஒன்றின் தலைவரும், நாடாளுமன்ற உறுபினருமான ரிஷாத்தை எந்த வித குற்றச் சாட்டுக்களும் இன்றி, நீதிமன்றத்தின் அனுமதி இன்றி நள்ளிரவு வேளையில் சர்வாதிகாரப் போக்குடன் கைது செய்திருப்பதானது, சிறு பான்மைச் சமூகத்தின் குரலை நசுக்குவதற்கு எடுத்த முதற்படியாகக் கருதுகின்றோம். எந்தக் குற்றச்சாட்டுக்களும் இல்லாது அவரைக் கைது செய்வது பழிவாங்கலாகவே கருதப்படுகின்றது. அவர் ஒரு முஸ்லிமாக இருந்தாலும், சிறு பான்மை தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவர். எந்த விதவேறுபாடும் இன்றி மூவின மக்களுக்கும் சேவையாற்றுகின்ற சேவகராக, நாடாளுமன்ற உறுப்பினராக 20 ஆண்டுகளாக குரல் கொடுத்து வந்தவர். இவரது குரலை நசுக்குவதற்காக அரசுக்கு ஆதரவளிக்கவில்லை. 52 நாள்கள் ஆட்சிக்கு ஆதரவளிக்கவில்லை என்பதற்கு பழிதீர்ப்பதற்காக இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. தலைவர்களின் குரல்களை நசுக்கினால் ஏனையவர்களின் குரல்களையும் நசுக்கலாம் என்ற நோக்கில் அரசு செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. சில இனவாதிகளின் ஆதங்கங்களைத் திருப்திப்படுத்தவே இந்த கைது இடம்பெற்றுள்ளது என்றார். (ப 19)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை **திருமதி வி. தர்சினி**
அவர்களின் அன்புத் தந்தை



**குணரட்ணம் நவரட்ணராஜா**
(ஓய்வுபெற்ற வைத்தியசாலை ஊழியர்)

அவர்கள் 24.04.2021 சனிக்கிழமை இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/ வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
**திருமதி மயூரதி டெனிஸ்வரன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**நாகமுத்து மகேந்திரன்**

அவர்கள் 25.04.2021 அன்று இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்**
**யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம். ஊர்காவற்றுறை**

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 . 05 . 1976



மறைவு 03 . 05 . 2015

**அமரர் தியாகராசா சசிக்குமார்**
**(திதி:26.04.2021)**

எங்கள் இல்லத்தின் ஒளிவிளக்கே
நிஜம் ஒன்று நிழலாய் மாறி
கண்முன்னே வாழ்ந்து கனவாகி
ஆண்டுகள் ஆறு ஆனபோதும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்!

**உங்கள் பிரிவாலும் துயரத்தாலும் வாடும்**

அப்பா (தியாகராசா) அம்மா (புஸ்பராணி)
தம்பிமார்கள் (மதனமோகன். பிரதீபன்.ஜெயரூபன்)
தங்கைகள் (சுஜாத்தா. சியாமளா)
மச்சாள்கள் (சுதர்ஷினி. துளசி)
மச்சான்கள் (கரன். யசிகரன்)
பெரியப்பா (டிசாந். யனுசியன். சசித்)
மருமகன் (அக்ஷயன். அவந்தியன்)

**46, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.** **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 11 . 1955



மறைவு 25 . 04 . 2021

**புஸ்பராசா கமலேஸ்வரி**

கச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராசா கமலேஸ்வரி அவர்கள் நேற்று (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ராமலிங்கம் ராசம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற கந்தையா நல்லம்மா தம்பதிகளின் மருமகளும், புஸ்பராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பிரசாந்த் மற்றும் அனுசியாவின் அன்புத் தாயாரும், செந்தூரானின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான பூமலர், பரமேஸ்வரி, பாலசிங்கம் மற்றும் புவனேஸ்வரி, லோகநாதன், ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேந்திரராசா, விமலாதேவி (இத்தாலி), சரோஜாதேவி, சிறிஸ்கந்தராஜா, ரஞ்சகுமார் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2021) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஸ்ரான்லிக் கல்லூரி ஒழுங்கை கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**புஸ்பராசா (கணவர்)**
**077 370 6515**


**PERSONAL CLASS**
A/L மாணவர்களுக்கு பொருளியல், வணிகக் கல்வி, பௌதிகவியல், தரம் 06 முதல் O/L வரையான மாணவர்களுக்கு அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படும்.
**T.P: 076 495 1206**

**எழுதுனர் தேவை**
நிறுவனமொன்றிற்கு எழுதுனர் பணிக்கு பெண் ஒருவர் தேவை. இடம் - யாழ்ப்பாணம்
**தொடர்பு 076 347 3897**

**ENGLISH PERSONAL CLASS**
**ஆங்கிலம்**
**பிரத்தியேக வகுப்புக்கள்**
அனுபவம் மிக்க ஆசிரியரினால்
உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
**TP: 077 658 9443 யாழ்ப்பாணம்**

**வீடு வாடகைக்கு உண்டு**
நல்லூர் Temple Road இல்
வீடு வாடகைக்கு உண்டு.
**தொடர்பு:**
**077 498 4307**

**வேலையாள்கள் தேவை**
சாவகச்சேரி தேவாலய வீதியில்
இயங்கும் ஸ்ரீ விக்னேஸ்வரா
களஞ்சிய வாகனத்தில்
பொருள்கள் விநியோகத்திற்கு
வேலையாள்கள் தேவை.
சாவகச்சேரியை அண்மித்த பகுதியில்
உள்ளவர்கள் 27.04.2021
செவ்வாய்க்கிழமை காலை 9.00
மணிக்கு நேரில் வரவும்.
077 817 0381, 076 297 9267


## கண்ணீர் அஞ்சலி



யா/ சென் பெனடிக்ற் வித்தியாலய
அதிபர் **அருட்சகோதரி மரிய வசந்தி**
அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி தேவதாசன் கத்தரீனா**

அவர்கள் நேற்றுமுன்தினம் (24.04.2021) சனிக்கிழமை இறைவடி சேர்ந்தார். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**நல்லூர் சென் பெனடிக்ற் வித்தியாலயம்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 04 . 1954



மறைவு 25 . 04 . 2021

**நவரத்தினராசா சரஸ்வதி**

யாழ்ப்பாணம் புங்குடுதீவு நடுவு திருத்தி 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 201/52 ,6ஆம் ஒழுங்கை கோவில் புதுக்குளம் வவுனியாவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி. நவரத்தினராசா சரஸ்வதி நேற்று (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் நவரத்தினராசா (செயலாளர்- கோவில்குளம் சிவன்கோவில்) அவர்களின் அன்புத் துணைவியாரும், புங்குடுதீவு நடுவுதிருத்தி காலஞ் சென்ற நமசிவாயம் அன்னம்மா இணையரின் அன்பு மகளும், நயினாதீவு 6ம் வட்டாரம் காலஞ்சென்ற ஆறுமுகம் வடிவாம்பிகை (ஆதின கர்த்தா நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில்) இணையரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சரோஜினி தேவி மற்றும் ரதிதேவி (பிரான்ஸ்) ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், விஷ்ணுகரன் (பிரான்ஸ்), விசாகை (ஆசிரியை - வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), கௌசிகன் (பிரான்ஸ்), கார்த்திகாயினி (ஆசிரியை - கோவில்குளம் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிருந்தா (பிரான்ஸ்), கஜேந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் வலயக் கல்வி அலுவலகம் வவுனியா வடக்கு), சுஜிதா (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (சமுர்த்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சின்மகி, பார்கவி, ஜெஸ்வின் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் காசினி, சபரிவாசன், தர்மிகன், ஹர்சிகன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.04. 2021 செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகன கிரியைகளுக்காக கோவில் குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**201/52, 6ஆம் ஒழுங்கை கோவில் புதுக்குளம். வவுனியா.**
024-222 0002, 077 907 5804

**தகவல்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொற்றாளர்கள் அதிகரித்தாலும் உரிய சிகிச்சை வழங்கத் தயார்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு. ஏப்.26**



**இலங்கையில் நாளொன்றுக்கு 1000 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டாலும் சிகிச்சையளிப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்த உரிய நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்படும். எவ்வாறிருப்பினும் நிலைமை அந்தளவுக்கு தீவிரமடையாமலிருப்பதற்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த ஆண்டு இரு தடவைகள் தீவிரமான கொவிட் தொற்று ஏற்பட்ட போதிலும், மக்களின் முழுமையான ஒத்துழைப்பால் அதனை வெற்றிகரமாக கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்தது. அதேபோன்று இம்முறையும் மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாரம் நீண்ட விடுமுறை என்பதால் பெருமளவானோர் சுற்றுலா செல்வதற்கு திட்ட மிட்டிருக்கலாம்.

தற்போதுள்ள நிலைமையைக் கருத்திற்கொண்டு அவற்றை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தற்போது பரவும் வைரஸ் 14 நாள்களின் பின்னரே அறிகுறிகளைக் காண்பிக்கிறது.

எனவே நாட்டைப் பாதுகாக்க மிகுந்த பொறுப்புடன் செயற்படுமாறு சகலரிடமும் கேட்டுக் கொள்கின்றோம்- என்றார். (ப)

# அபிவிருத்திக்கு ஆதரவு: சட்டவரைவுக்கே எதிர்ப்பு

## ஐ.ம.ச. தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.26

துறைமுக நகர அபிவிருத்தியை ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கவில்லை. அதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள சட்ட வரைவையே எதிர்க்கின்றோம்.

துறைமுக நகரின் உரிமையாளர்கள் இலங்கை மக்களாக இருக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019 ஆம் ஆண்டு இது தொடர்பில் தயாரிக்கப்பட்ட சட்ட வரைவில், அரச பதவி வகிக்கின்ற அதிகாரிகளே இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்ற ஏற்பாடு காணப்பட்டது. மத்திய வங்கி ஆளுநர் , நிதி அமைச்சின் செயலாளர், துறைமுக நகர் உள்ளடங்கும் அமைச்சின் செயலாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர், முதலீட்டுச் சபைத் தலைவர் மற்றும் அரசமைப்பு சபை அனுமதி வழங்கும் மூவர் ஆகியோர் அதன் உறுப்பினர்களாகக் காணப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனையடுத்து கடந்த வருடம் ஜுன் மாதத்தில் தயாரிக்கப்பட்ட சட்டவரைவின் மேற்கூறப்பட்ட அரச பதவி வகிக்கும் 5 அதிகாரிகளுக்கு மேலதிகமாக மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபைத் தலைவர் உள்ளிட்ட இருவர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன்மூலம் அரசுக்கு காணப்படும் அதிகாரம் மேலும் வலுப்படும். இதனை ஆரம்பிப்பதற்கான 400 மில்லியன் ரூபா நிதியை வெளிநாட்டு நிறுவனமொன்றே வழங்கும் என்று தற்போதைய சட்ட வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 2019 ஆம் ஆண்டு சட்ட வரைவில் நாடாளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டு அரசின் ஊடாக இந்த நிதி வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே சட்ட வரைவு முதலீட்டு சபைச் சட்டத்துக்குட்பட்டதாகக் காணப்பட வேண்டும். இந்த நிபந்தனைகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு ஜனாதிபதி உள்ளிட்டவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார்.

(ப-4)

# வில்லூன்றி தீர்த்தக்கரையில் சித்திரை பூரணை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.26

வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் சித்திரை பூரணை நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை வழமை போல சிறப்பாக நடைபெறவுள்ளன.

வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் அதிகாலை விசேட அபிசேகம் மற்றும் பூசைகள் நடைபெற்று காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்ற பின் தீர்தக்கரையில் பொது மக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்துகொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று ஆலய தர்மபரிபாலன சபை அறிவித்துள்ளது. (ஐ)



# இயற்கை விவசாயத்துக்கு தானியங்கள் வழங்கல்

மன்னார்,ஏப்.26

மன்னாரில் இயற்கை முறையிலான விவசாயச் செய்கையை மேம்படுத்தும் நோக்கில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தால் விவசாய தானியங்கள் வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கத்தாளம்பட்டி மற்றும் அந்தோனியார்புரம் ஆகிய கிராமத்தில் உள்ள பெண்கள் குழுவினருக்கு நேற்றுமுன்தினம் குறித்த தானியங்கள் வழங்கப்பட்டன.

பெண்கள் தமது சுய தேவைக்கான விவசாயத்தை இயற்கை முறையில் தாங்களாகவே உற்பத்தி செய்யவதனூடாக நஞ்சற்ற உணவை சமூக மட்டத்தில் வழங்க மடியும் என்ற அடிப்படையில் குறித்த விதை தானியங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-213)



நாவாந்துறை மற்றும் வண்ணார் பண்ணைப் பிரதேசங்களில் தனிமைப்படுத்தப்பட்ட 130 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ-17)

# நூல் வெளியீடு

அரியாலை,ஏப்.26

பன்னிரு திருமுறைத்திரட்டு திருப்புகழுடன் 30 தொகுதிகள் நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று திங்கட்கிழமை அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் மதியம் 12.45 மணியளவில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் முன்னாள் தலைவர் வே. இரகுநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)







யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் நேற்று சித்திரத் தேரில் வலம்வந்து காட்சியளித்தார். ஆலயத்தின் சித்திரத் தேர் அமைக்கப்பட்டு இந்த ஆண்டு 50ஆவது ஆண்டு நிறைவாகும் என்பது சிறப்பம்சமாகும்.

படங்கள் - ஐ.சிவசாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம் 17.12.1941

மறைவு 20.04.2021

# பொன்னர் சிவலிங்கம்

(அச்சுவேலி பிரதேச சபை உறுப்பினராகவும் அச்சுவேலி மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ப.மா.சங்க முன்னாள் செயலாளரும், வலி கிழக்கு வட பகுதி (அச்சுவேலி), ப.நோ.கூ.சங்க முன்னாள் இயக்குனர் சபை உறுப்பினராகவும், அச்சுவேலி வடக்கு கதிரொளி சனசமூக நிலையத்தின் ஆரம்பக் கால உறுப்பினராகவும், அச்சுவேலி வடக்கு சித்திர வேலாயுதர் ஆலய சபை பொருளாளர் வலி-கிழக்கு தனியார் சிற்றூர்தி சங்கத்தின் ஆரம்ப கர்த்தாவாகவும், செயலாளரும், அச்சுவேலி விவசாய சம்மேளனத் தலைவர், செயலாளராகவும் அச்சுவேலி இணக்க சபை உறுப்பினர்)

அச்சுவேலி மத்திய கல்லூரி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் பின்லாந்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் சிவலிங்கம் அவர்கள் கடந்த (20.04.2021) செவ்வாய்க்கிழமை பின்லாந்தில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர்-பொன்னு தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை-பொன்னு தம்பதியரின் மருமகனும் யோகராணியின் (பின்லாந்து) அன்புக் கணவரும், சுஜீவன் (பின்லாந்து), சுனீதா (பின்லாந்து), ரமணன் (பின்லாந்து), நீரஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தங்கமலர் (சுவிஸ்), மகேந்திரலிங்கம் (கனடா), சந்திராதேவி (இந்தியா), செல்வராணி (பிரான்ஸ்), வசந்தகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பூமலர் (நோர்வே), சுப்பிரமணியம், இராசமலர் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான தங்கராசா, நடராசா (பிரான்ஸ்), வீரசிங்கம், தேவராசா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான குமரேசு, A.V.K. மாணிக்கம் ஆகியோரின் சகலனும், சற்குணவதியின் உடன்பிறவாச் சகோதரரும், நிவேதா (பின்லாந்து), தனஞ்செயன் (பின்லாந்து), தமயந்தினி (பின்லாந்து), பிரதீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், அபிஷன், அபிராமி, அலெக், விவ்யா, பிரவீண், நிதுஷன், ஆதேஷ், அர்த்தனா, அக்ஷனா, அதிஸ்ரர் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (28.04.2021) புதன்கிழமை Honkanummen kappeli, Vanha porvantie 225, 01380 Vantau, Finland என்ற முகவரியில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணிவரை இடம்பெறும். அன்னாரின் அஞ்சலி நிகழ்வு அச்சுவேலியிலுள்ள அவரது பிரப்பந்தாழ்வு இல்லத்தில் அதே தினம் (28.04.2021) புதன்கிழமை பகல் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:- அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வுகள் முகநூல் பக்கம் (Face book ID - siva yoga) மற்றும் அன்னாரின் பிரப்பந்தாழ்வு இல்லத்திலும் நேரலையில் ஒளிபரப்பாகும்.

தகவல்:
**தேவி ரீச்சர் (மைத்துனி)**

**தொடர்புகளுக்கு:**

| | |
|---|---|
| யோகராணி (மனைவி) | - 0035 844 243 2440 |
| சுஜீவன் (மகன்) | - 0035 850 3023 128 |
| சுனிதா (மகள்) | - 0035 840 9382 304 |
| நீரஜா (மகள்) | - 0033 749 8726 82 |
| ரமணன் | - 0035 844 077 1712 |
| சுனேதா | - 077 280 4787 |
| ராஜன் | - 077 773 3532 |
| தனஞ்செயன் (மருமகன்) | - 00358442175050 |
| பிரதீபன் (மருமகன்) | - 0033 78141 7324 |

**வல்லை வீதி, அச்சுவேலி.**

## மரண அறிவித்தல்



# நாகலிங்கம் பத்மநாதன்

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கெண்ட நாகலிங்கம் பத்மநாதன் அவர்கள் நேற்று (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் வள்ளியம்மை அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற திரு.திருமதி தம்பியப்பா அவர்களின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தனலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், வசந்தி (திருகோணமலை), ஜெயக்குமார், பத்மஸ்ரீ (லண்டன்), சுகுமார் (கொழும்பு), அவர்களின் அன்புத் தந்தையும், யோகராஜா, கமலேஸ்வரி, துரைசிங்கம், தர்ஷா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சின்னம்மா, ராசம்மா, சின்னராசா, லோகநாதன், மற்றும் நாகேஸ்வரி, (கிளி-லண்டன்), ஆகியோரின் அன்பு சகோதரரும், கஜீபன், ருசாந்தன், ரேணுஜா, தேனுசாந், மதுஷன், விதுர்ஷன், கிஷாகினி, விதுர்ஷிகா, துவாரகன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (26.04.2021) திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஜெயக்குமார்- 070 333 7070,**
**076 678 7288**
**பத்மஸ்ரீ - 0044 7432115662**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**இல.131, பாற்பண்ணை வீதி**
**திருநெல்வேலி.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
29
-
03
-
1958



மறைவு
24
-
04
-
2021

# அப்பாத்துரை சந்திரகுமார் (குட்டான்)

(யாழ் போதனா வைத்தியசாலை ஓய்வு பெற்ற ஊழியர்)

மயிலணி வடக்கு சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அப்பாத்துரை சந்திரகுமார் அவர்கள் 24.04.2021 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை தங்கம்மா தம்பதிகளின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சந்திரிகா (கனடா), சந்திரேகா, திலீபன் (உரிமையாளர் A.C.T அலுமினியம் கண்ணாடி களஞ்சியம்), கஜீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திவாகரன் (கனடா), ஜெயரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆர்வலன், ஆதனன், மேகா (கனடா), ஆதனா, அக்ஷயா ஆகியோரின் பாசமிகு பேரனும், விக்கினேஸ்வரி, காலஞ்சென்ற லிங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சண்முகராசா, திருநாவுக்கரசு (சுவிஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரது இறுதி கிரியைகள் இன்று (26.04.2021) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.30 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**
**076 617 8672 (மகன்), 076 615 3080**

தகவல்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஷாத் கைது பழிவாங்கல் அல்ல; சட்டம் தன் கடமையைச் செய்யும்!

## கூறுகின்றது அரசு



**கொழும்பு, ஏப். 26**

**அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சரும், ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் அவரது சகோதரரான ரியாஜ் பதியுதீன் ஆகிய இருவரும் கைதுசெய்யப்பட்டமைக்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையும் அல்ல. சட்டம் தன் கடமையைச் செய்யும்.**

இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளரும் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீனும் ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கைது நடவடிக்கைக்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையும் அல்ல.

எதிர்க்கட்சியினரும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் ரிஷாத் மற்றும் அவரது சகோதரர் கைது தொடர்பில் அரசுமீதுவீண்பழிசுமத்துகின்றனர். சட்டம் தன் கடமையைச் செய்யும் இதில் அரசின் தலையீடு இருக்கவே மாட்டாது என்பதை அவர்கள் கவனத்தில்கொள்ளவேண்டும். ஆனால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன்தொடர்புடைய அனைவரும்கைது செய்யப்பட வேண்டும், குற்றவாளிகள் பாரபட்சமின்றி தண்டிக்கப்பட வேண்டும், நீதி கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகள் சட்ட நடவடிக்கைகளூடாக நிறைவேறியே தீரும். இதில் அரசு உறுதியாக இருக்கின்றது- என்றார். (ஒ.22)

# ரஞ்சனுக்கு பொதுமன்னிப்பு வழங்குங்கள்

## ஆளுக்கட்சி எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஏப். 26

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தபய ராஜபக்சவிடம் ஆளுங்கட்சி உறுப்பினர் கீதா குமாரசிங்க கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை, அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரஞ்சன் ராமநாயக்க எம்மைப் போன்ற ஒரு கலைஞர் என்ற ரீதியில் அவருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பை வழங்க வேண்டும். அவர் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் நான்கு வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்று பல தரப்பினரும் வலியுறுத்திவரும் சூழலில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-இ)



# உதவிகள் வழங்கல்

கிளிநொச்சி,ஏப்.26

பூமணி அம்மா அறக்கட்டளை ஊடாக தனங்கிளப்பு பிரதேசத்தில் வாழும் கடற்றொழில் செய்யும் ஒருவருக்கு கூட்டு வலை உபகரணங்களும், கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்கு தையல் இயந்திரமும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினரும் பூமணி அம்மா அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவருமான லயன்.கலாநிதி ந. தனேந்திரனால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ)

# பிரிவுபசார நிகழ்வு

முல்லைத்தீவு,ஏப்.26

முல்லைத்தீவு -கரைதுறைப்பற்று தண்ணி முறிப்பு கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற கிராம அலுவலருக்கான பிரிவுபசார நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கிராம அலுவலர் பரலோகநாதன் தர்சனுக்கே தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான்குளம் கிராம மக்களால் பிரிவுபசார நிகழ்வு நடத்தப்பட்டது. (ஐ-13)



# அதிகரிக்கும் கொரோனா பிரதேச, மாவட்ட மட்டத்தில் தொற்றாளர்களுக்கு சிகிச்சை

## கொவிட் தடுப்புக்கான செயலணி தீர்மானம்

கொழும்பு,ஏப்.26

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களுக்குக் காணப்படும் நோய் நிலைமையின் அடிப்படையில், அவர்களை வேறுபடுத்தி பொருத்தமான மருத்துவமனைகளில் அனுமதிப்பதற்கும் , எதிர்வரும் தினங்களில் பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் கொவிட் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான மருத்துவமனைகளைத் தயார்ப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைவாக தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், கொரோனாத் தொற்றாளர்களுக்குத் தேவையான உயர்மட்ட ஒட்சிசன் வழங்கல், மருத்துவர்கள் மற்றும் தாதிகள் ஆகியோர் உள்ளிட்ட மருத்துவத் துறையினருக்குத் தேவையான பாதுகாப்பு ஆடைகளை வழங்கல், தொற்றாளர்களுடன் வேறு நோய்களுக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்படுபவர்களுக்கான சேவையை வலுப்படுத்தல், நாளொன்றுக்கு 15 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்தல், தனிமைப்படுத்தல் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்தல், அவற்றை மீறுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுத்தல், வெளிநாடுகளிலிருந்து வருகை தருபவர்களுக்கு விசேட தனிமைப்படுத்தல் சட்டத்தைத் தயாரித்தல் உள்ளிட்ட தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. (ப-4)

# கரைச்சி தவிசாளர் திடீர் களப் பயணம்

கிளிநொச்சி, ஏப்.26

பரந்தன் பகுதியில் அமைந்துள்ள உணவகங்களின் சுகாதாரத்தன்மை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து, கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் திடீர் களப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

உணவகங்களின் வெளிப்புற சுகாதார நிலைமைகளைப் பார்வையிட்ட அவர் உணவகங்களின் கழிவுநீர் வெளியேற்றம் மற்றும் கடைகளின் சுற்றுச்சூழல் நிலைமை ஆகியவற்றை ஆராய்ந்தார்.

வெளிப்புறச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்காத உணவகங்களுக்கு, எதிர்வரும் மூன்று நாள்களுக்குள் சுத்தமாக்கவேண்டும் என்று கால அவகாசம் வழங்கப்பட்டது. இல்லாது போனால் அக்கடைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிகளை இரத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தவிசாளர் தெரிவித்தார். (ப-6)



# சுகாதார விதிகளை கட்டாயம் கடைப்பிடிக்கவும்

## சாவ.சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26

வடக்கு மாகாணத்தில் இதுவரை 18 பேர் கொரோனாத் தொற்றால் இறந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்காமல் தடுக்க மக்கள் சுகாதார விதிமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி சு.சுதேஸ்குமார் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

அடுத்துவரும் மூன்று வாரங்களுக்கு கொரோனாவின் தாக்கம் அதிகரிக்கலாமென சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இதனை எச்சரிக்கையாகக் கருதி பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளான கை கழுவுதல், முகக்கவசம் கட்டாயம் அணிதல், சமூக இடைவெளிகளைப் பேணுதல், மற்றும் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்தல் போன்றவற்றை பின்பற்றுக. தவறின் தற்போது இந்தியாவில் காணப்படுவது போல இறப்பு விகிதம் அதிகரிக்கும் அபாயம் ஏற்படலாம்.- என்றார். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி இராசம்மா சண்முகநாதன்

மாந்தரின் வடிவினிலே - காணும்
தெய்வத்தின் தரிசனமே!
பாசத்தை பொழிந்தவளே - எங்கள்
தாயவள் இராசம்மா - உந்தன்
பிள்ளைகளாய் பிறந்தோம் - என்ன
மாதவம் செய்து விட்டோம்!....
தாயெனும் கோயிலிலே - என்றும்
அன்பெனும் தெய்வங்களே - எங்கள்
அன்னையை நினைக்கையிலே - இரு
கண்களும் நனைகிறதே!
உன்னை எண்ணி நீ வாழ்ந்ததில்லையே
எங்கள் வாழ்க்கையே உந்தன் இன்பமே
தூங்கும் போதிலும் எங்கள் உணர்வையே
தாங்கித் துடிக்குமே உந்தன் இதயமே!
அன்னைக்கு நிகரில்லை - அவள்
அன்புக்கு இணையுமில்லை - எங்கள்
அன்னையை வணங்காமல் - இந்த
அவனியில் உயர்வுமில்லை!!

தோற்றம்
16.03.1939

மறைவு
27.03.2021

இல.4 3/1, மணல்தறை ஒழுங்கை
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்


உந்தன் பிரிவால் வாடும்!....
உங்கள் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்

---

யாழ். சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த

## ஸ்ரீமதி காயத்ரிதேவி லக்ஷ்மிகாந்தம் ஐயர் அவர்களின்

# நன்றி நவிலல்



08.04.2021 வியாழக்கிழமை பங்குனி திங்கள் அபரபட்ச துவாதசி திதி நன்னாளில் இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் ஸ்வர்க்கஸ்ரீ ஸ்ரீமதி காயத்ரிதேவி அவர்களின் பேரிழப்பால் தனிமைப்பட்டு செய்வதறியாது திகைத்து துவண்டு நின்ற வேளையில் நேரிலும், தொலை பேசி ஊடாகவும், தொலைநகல், மின்னஞ்சல், சமூக வலைத்தளங்கள் ஆகியவை மூலமாகவும், ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியவர்களுக் கும், கண்ணீர் அஞ்சலி பதாகைகளை வைத்தும், பத்திரி கைகளில் வெளியிட்டும், அஞ்சலி செலுத்தியோரிற்கும், அன்னார் மருத்துவமனையில் இருந்த போது வந்து பார்த்து எமக்கு ஆதரவாக இருந்தோரிற்கும், இந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் எமக்கு நேரம் தவறாது உணவு தந்தவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்று வரை எமக்கு இன்னோரன்ன வழிகளில் உதவி செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்-துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

"ஸ்கந்த புஷ்கரணி"
சிவஞானப்பிள்ளையார் கோவிலடி
மானிப்பாய் வீதி
உடுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையளித்த...

கைப்பற்றிய காணியினுள் அறிவித்தல் பலகையையும் இரவோடு இரவாக இராணுவத்தால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் காங்கேசன்துறை மத்தி (ஜே/234) கிராம அலுவலர் பிரிவு மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டது. அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது காணிகளைத் துப்புரவு செய்துள்ளனர்.

இந்த நிலையில் பொன்னாலை பருத்தித்துறை வீதியில், காங்கேசன்துறை சந்திக்கு அண்மையாக, கடற்கரைப் பக்கமாகவுள்ள இரண்டு தனியார் காணிகள் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு இரண்டு தனியார் காணிகளிலும் இராணுவத்தினர் அறிவித்தல் பலகை நட்டுள்ளனர். 'இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள இப்பிரதேசத்தினுள் அநாவசியமாக உட்பிரவேசித்தல் தடை செய்யப்பட்டுள்ளது' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)

## கொரோனா...

அமைச்சு நேற்றிரவு அறிவித்தது.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த 79 வயது ஆண் ஒருவரும், பொலநறுவையைச் சேர்ந்த 73 வயது ஆண் ஒருவருமே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

இந்த உயிரிழப்புக்களுடன் நாட்டில் கொரோனா வைரஸ தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 644 ஆக உயர்ந்துள்ளது. (எ-இ)

## தொற்று...

வியல் மற்றும் மூலக்கூறு அறிவியல் துறை பேராசிரியர் நீலிகா மலவிகே மற்றும் பேராசிரியரும் இராஜாங்க அமைச்சருமான சன்ன ஜயசுமன்ன ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

காற்றின் மூலம் பரவும் என்று அடையாளம் காணப்பட்டுள்ள புதிய வீரியம்கொணட கொவிட் வைரஸ் தாக்கத்திலிருந்து, மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு கட்டாயம் முகக்கவசங்களை அணிய வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட வைரஸ்களை விடவும், இந்த முறை அடையாளம் காணப்பட்டுள்ள வைரஸ் காற்றின் மூலம் வேகமாகப் பரவக்கூடியது.

புதிய கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான ஒருவரிடமிருந்து, அந்த வைரஸ் சுற்றுச்சூழலில் பரவும் பட்சத்தில், அது சுமார் ஒன்றரை மணித்தியாலம் வரை அதே இடத்தில் காணப்படும்.

இதற்கு முன்னர் பரவிய வைரஸ் காரணமாக ஒருவருக்கு காய்ச்சல், இருமல், தொண்டை வலி உள்ளிட்ட நோய் அறிகுறிகள் தென்பட்டன. அதன் பின்னரே நுரையீரல் பாதிப்பு ஏற்படும். தற்போது பரவும் புதிய வகை கொவிட் வைரஸ் தொற்றுக்குள்ளான ஒருவருக்கு நோய் அறிகுறிகள் தென்படுவதற்கு முன்னரே, அவருக்கு நிமோனியா ஏற்படும்.

இந்த வைரஸ் தொற்றானது குறைந்த வயதுடையவர்களையும் இலகுவில் தாக்கக்கூடிய தன்மைகொண்டது என்று பேராசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். (ஒ-த-22)

## யாழ். சட்டத்துறை...

ஆய்வுகூடத்தில் நேற்று 408 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 9 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்கள் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் கேகாலை மற்றும் குருநாகல் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மருத்துவமனை விடுதியில் சிகிச்சை பெறும் நோயாளி ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் ஏற்கனவே தொற்றுடன் இனங்காணப்பட்டவருடன் தொடர்பில் இருந்தமைக்காக சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள்.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவரும் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் தாதி ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலும் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## சீன அன்பளிப்பு...

இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொரோனா தீவிர நிலைமை தொடர்பில் அவர் விடுத்துள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக சுகாதார நிறுவனம் தற்போது அங்கீகரித்துள்ள மற்றும் எதிர்காலத்தில் அங்கீகாரம் வழங்க உள்ள கொரோனாத் தடுப்பூசிகளில் நான்கு தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டுவருவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

முதலில் கொண்டுவரப்பட்ட அஸ்ட்ராஜெனகா தடுப்பூசி 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு இதுவரையில் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தடுப்பூசியின் இரண்டாவது கட்டம் மே மாதம் முதலாம் வாரத்தில் வழங்கப்படவுள்ளது.

முன்னணி சுகாதார அதிகாரிகள், கொவிட் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள முப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 3 லட்சத்து 56 ஆயிரம் பேருக்கு இரண்டாவது கட்டம் வழங்கப்படும். எஞ்சிய தேவையை நிறைவேற்றிக்கொள்வதற்கு அஸ்ட்ராஜெனகா தடுப்பூசி உற்பத்தி செய்யும் உலகில் உள்ள ஏனைய நிறுவனங்களுடன் அரசு தற்போது கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றது.

ரஷ்யாவில் உற்பத்தி செய்யப்பட்ட ஸ்புட்னிக் 2 லட்சம் தடுப்பூசி இந்த மாத இறுதியிலும், 4 லட்சம் தடுப்பூசிகள் மே மாதத்திலும், 8 லட்சம் தடுப்பூசிகள் ஜூன் மாதத்திலும் 12 லட்சம் தடுப்பூசிகள் ஜூலை மாதத்திலும் நாட்டுக்கு கொண்டு வரப்படவுள்ளன. 13 மில்லியன் ஸ்புட்னிக் தடுப்பூசிகளை நாட்டுக்கு கொண்டுவருவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

அன்பளிப்பாக சீனாவிடம் இருந்து கிடைக்கப்பெற்றுள்ள 6 லட்சம் சைனோஃபார்ம் தடுப்பூசிகள் உலக சுகாதார நிறுவனத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் எதிர்வரும் சில வாரங்களில் நாட்டு மக்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக அரச மருந்துக் கூட்டுத்தாபனம் பைசர் தடுப்பூசியை கொண்டுவருவதற்கு தேவையான ஆரம்ப உடன்படிக்கைகளில் தற்போது கைச்சாத்திட்டுள்ளதுடன், அவற்றை மிக விரைவில் நாட்டுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ-இ)

## அனைத்து...

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் இரு வார காலப் பகுதியில் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்த அரச நிகழ்வுகள், விழாக்கள் மற்றும் தனியார் நிகழ்வுகள், உற்சவங்களை நடத்துவதற்கு அரசு தடை விதித்துள்ளது.

நாட்டில் தற்போது வேகமாகப் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## எழுமாற்று...

லேயே இவர்களுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் வவுனியாவின் பல இடங்களில் எழுமாற்றாகப் பலரின் மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருந்தன. அவற்றின் முடிவுகள் நேற்று வெளியான நிலையில், அவர்களில் 4 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கு, கெப்பிற்றிக்கொலாவவில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் சில தினங்களுக்கு முன்னர் கெப்பிற்றிக்கொலாவவில் உள்ள தனது வீட்டுக்கு விடுமுறையில் சென்றுள்ளார். (எ-110)

## நிலக்...

இந்தச் சம்பவம் பிற்பகல் 1.30 மணியளவில் வட்டுவாகல் பாலத்துக்கு அண்மையில் நடந்துள்ளது. வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞர்கள் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். மற்றையவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

முல்லைத்தீவு செல்வபுரத்தைச் சேர்ந்த சந்திரகுமார் டிசாந் (வயது19) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். வட்டுவாகல் கிராமத்தைச் சேர்ந்த செல்வகுமார் சயந்தரூபன் (வயது20) என்ற இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

உயிரிழந்தவர் வட்டுவாகல் பாலத்துக்கு அருகில் சர்பத், இளநீர் வியாபாரம் செய்பவர். வியாபாரம் நடக்கும் இடத்துக்கு அருகிலேயே இந்த வெடிப்புச் சம்பவம் நடந்திருக்கின்றது. கைபேசியில் உரையாடிக்கொண்டு இருவரும் நடந்து சென்றபோதே இந்த வெடிப்புச் சம்பவம் நடந்துள்ளது. வெடிப்புச் சம்பவம் நடந்தபோது, டிசாந்தின் தாய் அந்த இடத்தில் இருந்துள்ளார்.

மகனும், நண்பனும் சர்பத் தயாரிக்குமாறு கூறிவிட்டு கைபேசியில் உரையாடிவாறு 50 மீற்றர் தூரத்தில் நடந்து சென்றனர். அப்போது திடீரென பெரும் சத்தம் கேட்டது. அருகில் எவரும் இல்லை. நான் ஓடிச் சென்று பார்த்தேன். எனது மகன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான். எனது மகனின் கால்களில் இருந்து இரத்தம் பீறிட்டது. அவனது நண்பனும் பலத்த காயங்களுடன் வீழ்ந்து கிடந்தான்.

அருகில் உள்ள கோத்தாபய கடற்படை முகாமை நோக்கிக் கத்தினேன். இவர்களைக் காப்பாற்றுங்கள் என்று கதறினேன். எவரும் வரவில்லை. அந்த நேரம் வீதியில் வந்தவர்கள் சிறிய வாகனம் ஒன்றில் இருவரையும் ஏற்றி மருத்துவனைக்குக் கொண்டுசென்றனர். அப்போதுதான் கடற்படை முகாமில் இருந்து வந்தார்கள். படம் எடுத்தார்கள் என்று டிசாந்தின் தாய் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு முல்லைத்தீவு பொலிஸார் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். படை அதிகாரிகளும் அங்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

அந்தப் பகுதி அபாயப் பிரதேசமாக அறிவிக்கப்பட்ட பகுதி என்று பொலிஸார் தெரிவித்தனர். நீதிமன்ற உத்தரவுக்கு அமைய வெடிமருந்து நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-19)

## காணி...

சின் காலத்தில் காங்கேசன்துறையில் விடுவிக்கப்பட்ட தனியார் காணிகளை இராணுவத்தினர் மீளக் கையகப்படுத்துவது தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட காணிகளை நாம் மீள ஆக்கிரமிக்கவில்லை. அவற்றை சுவீகரிக்கும் நோக்கமும் எமக்கு இல்லை. காங்கேசன்துறையில் நீங்கள் குறிப்பிடும் விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்றேன் என்று அவர் தெரிவித்தார். (ஒ5.22)

## அதிவேகத்தால்...

சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மூன்று பேர் காயங்களுடன் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கல்குண்ணாமடுவைச் சேர்ந்த ஆக்சரசினி (வயது9) என்ற சிறுமியே உயிரிழந்தார். அவரது சிறிய தாய் மற்றும் முச்சக்கரவண்டி சாரதி மோட்டார் சைக்கிள் சாரதி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சிறுமி தனது சிறிய தாயாருடன் சிதம்பரபுரம் பகுதியில் உள்ள மருத்துவரிடம் மருந்து எடுப்பதற்காக முச்சக்கரவண்டியில் பயணித்துள்ளார்.

அலகல்லு பகுதியில் பயணித்துக்கொண்டிருந்தபோது அவர்கள் பயணித்த முச்சக்கரவண்டியும் எதிரே வேகமான வந்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து நடந்துள்ளது. முச்சக்கரவண்டியிலிருந்து தூக்கிவீசப்பட்ட சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக ஈரப்பெரியகுளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த110.18)

## நாட்டை...

இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொரோனா தீவிர நிலைமை தொடர்பில் அவர் விடுத்துள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். கொரோனா பரவலை ஒழிப்பதில் முக்கிய இடம் வகிப்பது மக்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவதாகும் என உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் ஜெனிவாவில் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

உரிய முறையில் முகக்கவசங்களை அணிவது, சவர்க்காரம் அல்லது தொற்று நீக்கிகளை பயன்படுத்தி அடிக்கடி கைகளைக் கழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல், தேவையற்ற பயணங்கள் மற்றும் விழாக்கள் போன்றவற்றைத் தவிர்த்தல் ஆகியவை இவற்றில் முக்கியமானவையாகும்.

சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவது, ஒழுக்கப்பண்பாடான சமூக நடத்தைகள் போன்றவை வைரஸ் தொற்றைத் தடுப்பதற்கு சிறந்த தீர்வாகும் என்பது அநேக நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமான அனுபவமாகும்.

கொரோனா பிரச்சினைக்குத் தீர்வாக சில காலம் நாட்டை மூடி வைக்க வேண்டுமென சிலர் எண்ணுகின்றனர். ஆரம்ப காலகட்டங்களில் அத்தகைய நடைமுறையின் மூலம் திருப்தியான பெறுபேறு கிடைக்கப்பெற்றபோதும் நீண்டகாலத்தில் அது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் பொருளாதாரத்துக்கும் மிகப் பொரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

எமது நாட்டின் வருமானம் ஈட்டும் பெரும்பான்மையானவர்கள் ஒழுங்குபடுத்தப்படாத வாழ்வாதார வழிகளில் தங்கியுள்ளனர். எனவே அரசு தனது பணிகளை மேற்கொண்டுவருவதுடன், மக்களும் நாட்டினதும் தம்முடையதும் நலனைக் கருத்திற்கொண்டு தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி விடுத்துள்ள விசேட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-5)

## போதைப்பொருள்...

என்று யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 24, 26, 34 மற்றும 38 வயதுடையவர்கள் என்றும், இவர்கள் இந்தியாவில் இருந்து ஐஸ், ஹெரோய்ன் மற்றும் கஞ்சா போன்றவற்றைக் கடத்தி வந்து யாழ்ப்பாணத்தில் விநியோகிப்பவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடம் இருந்து 7 கிலோ ஐஸ் போதைப்பொருள் மற்றும் 10 கிராம் ஹெரோய்ன் போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர் குருநகரைச் சேர்ந்தவர்கள் ஏனைய இருவரும் நீர்வேலி மற்றும் குருநகரைச் சேர்ந்தவர்கள். நால்வரில் ஒருவரே கடந்தக் கடத்தல்களின் பிரதான சந்தேகநபர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இவர்களிடம் இருந்து கூலர் வாகனம் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தக் கைது நடவடிக்கையை யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸ்ஸின் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான அணி முன்னெடுத்திருந்தது. (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொரோனாத் தொற்று

# அரச ஊழியர்களுக்கான சுற்றறிக்கை இந்த வாரம்

**கொழும்பு, ஏப். 26**

**கொரோனாத் தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில், எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதி வரையான காலப் பகுதிகளில் அரச நிறுவனங்களில் ஊழியர்களை கடமைக்கு அழைக்கும் முறைமை தொடர்பான சுற்றறிக்கை இந்த வாரம் வெளியிடப்படும் என்று அமைச் சின் செயலர் ரத்னசிறி தெரிவித்துள்ளார்.**

அரசால் கடந்த வாரம் கொரோனாத் தொற்றுக் காலத்தில் கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகள் தொடர்பான புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. இதனை அடிப்படையாக வைத்து அரச திணைக்களங்களில் ஊழியர்களைக் கடமைக்கு அழைக்கும் முறைமை தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது. இதேவேளை அரசு வெளியிட்ட கொரோனாத் தொற்று காலத்தின்போது கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகள் தொடர்பான சுற்றறிக்கையில், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மிகக் குறைந்தளவான, அதேநேரம் தேவை யான அளவு ஊழியர்களுடன் செயற்படவேண்டும் என்றும் வீடுகளிலி ருந்து பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)

## சுகாதார வழிகாட்டலுடன் பாடசாலைகள் செயற்படும்

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 26

கொரோனாத் தொற்றுக் காலப்பகுதியில் நடைமுறையில் உள்ள சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி, சகல பாடசாலைகளும் செயற்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. பாடசாலைகளின் அதிபர்கள் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் ஊடாக, அந்தந்தப் பாடசாலைகளின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றுக் காரணமாக அடுத்த மாதம் 31ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் வகையில் கடந்த 23ஆம் திகதி சுகாதார வழிகாட்டியொன்று அரசால் வெளியிடப்பட்டது. அதற்கமைய, பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளில் 50 சதவீத மாணவர்களுடன் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் என்பவை தொடர்ந்து மூடப்படும். மேலதிக வகுப்புகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது- என்றார். (ம-4)

## தனிநபர் இடைவெளி கருதி மேலதிக ரயில்கள் சேவைக்கு

கொழும்பு, ஏப். 26

பொதுப்போக்குவரத்தில் தனிநபர் இடைவெளி பேணுவதை வலியுறுத்தி, மேலதிக ரயில்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு ரயில் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேவேளை சகல ரயில் நிலையங்களிலும், பயணிகளின் உடல் வெப்பநிலை பரிசோதனை மற்றும் தொற்று நீக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ரயில் திணைக்களத்தின் பிரதி முகாமையாளர் காமினி செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் ரயில்களில் பயணிக்கும் பயணிகள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது கட்டாயம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## விதிமுறை மீறல்: 3,470 பேர் கைது

கொழும்பு, ஏப். 26

நாட்டில் கொரோனாத் தொற்றுக் காலப் பகுதியில் நடைமுறையில் உள்ள சுகாதார விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச் சாட்டில் இதுவரை 3 ஆயிரத்து 470 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். முகக்கவசம் அணியாமை மற்றும் தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர் 31ஆம் திகதி முதல் பொலிஸார் இவ்வாறான சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அதற்கமைவாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 19 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கிரிபத்கொட மற்றும் பிலியந்தலைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

**வேலையாட்கள் தேவை**

சட்டரிங் கம்பி, மேசன் வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் : Everything Here.Lk

077 706 1644, 076 924 1595

**மாஸ்க் விற்பனைக்கு**

One day மாஸ்க், பேபி One day மாஸ்க், (Kn95 வெள்ளை, கலர்), Kn95 பில்ரர் கறுப்பு வெள்ளை, Kn95 பேபி மாஸ் பிரிண்டர், பிலேன், சனிரேசர், கொரோனா கண்ணாடி, நியூ பாட்டா மொத்தமாக பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 077 8794 148

**TECHNA Technical Institute**

Techna

Cargils Square அருகில் யாழ்ப்பாணம்

**A/L தொழினுட்பப் பிரிவு**

2023,2022, 2021 பிரிவுகளுக்குரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன

- பொறியியல் தொழினுட்பவியல் - S.மயூரதன், G.கேதீஸ்
- உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் - M.விஷ்ணுதேவன், K.ஜெயந்தன்
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் - S.சக்தி
- தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் - T.லவன்
- விவசாய விஞ்ஞானம் - M.விஷ்ணுதேவன், K.ஜெயந்தன்
- புவியியல் - S.P.கரன்
- கணிதம் - G.V.ஹரிகரன்

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக Zoom Online Classes ஆரம்பமாகிறது.


ஆரம்பம் : 29.04.2021 வியாழக்கிழமை

பெறுபேறுகள் வெளிவந்ததும் 2021 Day Batch ஆரம்பமாகும்

தொடர்பு: 077 170 3549, 076 542 2960

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 - 08 - 1966



இறப்பு 22 - 04 - 2021

### திரு. நடராசா கிருஷ்ணநாதன்

(London City உரிமையாளர்)

ஐயனார் கோயிலடி மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் தற்போது ஐயனார் கோவிலடி மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு. நடராசா கிருஷ்ணநாதன் அவர்கள் 22.04.2021 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா (பொலிஸ்) - நாகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற தாமு - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கலாராணியின் அன்புக் கணவரும், நிஷாந்தன், விதுஷன், யதுஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருஷ்ணலிங்கம், கிருஷ்ணகுமாரி, கிருஷ்ணமூர்த்தி, கிருஷ்ணகுமார், கிருஷ்ணபவான் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஸ்ரீநிகிலா, இரத்தினராசா (ஓய்வு பெற்ற பிரதான சுங்க பரிசோதகர்), கலாவதி, சதீஜா, கஜேந்தினி, விஸ்வலிங்கம், கணேசலிங்கம், சத்தியமூர்த்தி, தெட்சணாமூர்த்தி, கலாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.04.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
கல்லாரை, மல்லாகம்.
077 665 0567, 077 169 7308

தகவல்:
திரு.திருமதி இரத்தினராசா
(அக்கா)

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யப் பணிப் பெண் தேவை

தொடர்பு 077 410 2724

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், உரும்பிராய், கோப்பாய் வீதியில் மெயின் றோட்டுடன் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(கோப்பாய் வீதி, கிருஷ்ணன் கோயிலுக்கு அருகாமை)

077 288 0152, 077 468 3354, 077 203 6402

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைகளைச் செய்வதற்கு பெண் பணியாளர் ஒருவர் தேவை

தொடர்பு 076 347 3897

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 36 ... அச்சகத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26. 04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.